1348

d. M. 1803. Vol. III—No. 7.

19 MAR 19

லக்ஷ்மி



சொந்தக்காரர்கள் :
எஸ். முத்தையா & கோ., சென்னை.

குஞ்சம் கட்டின

பட்டு லேஞ்சுகள்

நைஸான பட்டு, உடல் திக்கானது. பல வருடங்கள் உழைக்கும். பல வித மேகவர்ணக் கலர்கள், வெள்ளை, நீலம், சந்தனக் கலர் முதலிய பல கலர்கள்.

5 மு × 40 இஞ்சு 1-க்கு ரூ. 10.

ஷிஜரிகை கரைகள் போட்டது ரூ. 12 முதல் 14 வரை.

இமிட்டேஷன் ஸில்க் புடவைகள்

இந்தப் புடவைகளைப் பார்த்தால் அசல் பெங்களூர் பட்டுப் புடவைகளைப்போல் இருக்கும். கலருக்கு உத்திரவாதம். கலர் :—அரக்கு, மஞ்சள், கருப்பு, நீலம் முதலிய கலர்கள்.

18 மு × 2½ அகலம் புடவை 1-க்கு ரூ. 12 முதல் 20.

எங்களிடம் சேலம், மதுரை, கோரநாடு, கராச்சி, காசி முதலிய ஊர்களிலிருந்து புதுமாதிரியான பல ரகங்கள் ஏராளமாய் வந்திருக்கின்றன. நீங்கள் வேறிடங்களுக்குப் போகுமுன் ஒரு முறை எங்களிடம் வந்து பாருங்கள்.

வலைப் பனியன்

போத்தானில்லாதது நைஸானது

பனியன் 1-க்கு ரூ. 1, 1-4, 1-8.

கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் ஹவுஸ்,

188, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,

சென்னை.

OFFICE OF ... REGISTRAR ...
19MAR1926
MADRAS

ஓம்

லக்ஷ்மி

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

சித்திரப் படங்களுடன் கூடியது.

பத்திராசிரியர்: க. ச. சுந்தரர்.

மலர் ௩. { குரோதன௵ மாசி௴
1926 பிப்ருவரி௴ } இதழ் ௭.

அட்டவணை.

பக்கம்.

1. லக்ஷ்மி துதி ... ...
2. ஈசன் விரும்பும் இன்மலர் மூன்று ...
3. சிறுமணித்திரள் 317
4. பல் 323
5. பானுபாய் 329
6. கிராம புனருத்தாரணம் 338
7. நீண்டாயுள் 340
8. ஒழுக்கம் 350
9. வைதிக தேவதைகள் 359

லக்ஷ்மி

21356

சந்தா விவரம்.

உள் நாட்டுக்கு வருடம் 1-க்கு இந்தியா, பர்மா, சிலோன்	ரூ. 2 0
வெளி நாட்டுக்கு வருடம் 1-க்கு சிங்கப்பூர், பினங்கு, மோரீஸ், முதலிய இடங்களுக்கு	ரூ. 2 8

தனிப்பிரதி அணா 4.

நமது "லக்ஷ்மி" ஒவ்வொரு ஆங்கில மாத முடிவிலும் வெளியாகும் என்ற விஷயத்தை நேயர்கள் கவனிப்பார்களாக. பத்திரிகை கிடைக்காதவர்கள் மறுமாதம் 10உக்குள் சந்தா நம்பருடன் நமக்குத் தெரிவிக்கவேண்டும். அதற்கு மேல் கவனிக்கப்படமாட்டா. மானேஜர்.

உங்கள்

புத்தகசாலை

பூர்த்தி

யாகாது?

லக்ஷ்மி இதழ் 12-ம் காலிகோ பைண்டு செய்யப்பட்டு, கில்ட்டு எழுத்துடன் கூடிய 'லக்ஷ்மி' மலர் ஒன்றுக்கு ஆர்டர் செய்யுங்கள். 800 பக்கங்கள் 30 படங்கள் உள்ளது. புஸ்தகம் வைத்துக் கொள்வதற்கு அழகான பெட்டியுடன் விலை ரூ. 3.

தபாற் செலவு வேறு.

சொற்பக் காபிகளே கைவச முள்ளன.

முந்துங்கள்.

மானேஜர் "லக்ஷ்மி" ஆபீஸ், தபால் பெட்டி 99, சென்னை.

ஓம்.

லக்ஷ்மி துதி

வாழ்வு வரினு மனே தோ திரந்துண்டு
மாழ்கு பெருந்

தாழ்வு வரினுந் தமியேன் மறக்குந்
தகுதியவோ

வாழ்வுறுஞ்சிந்தைப் புலவோர்பல்லோர்
தொழு மாளரியும்

வீழ்வுறுஞ் செம்பொற் றிருமாது
தாட்டுணை மென்மலரே.

ஈசன் விரும்பும் இன்மலர் மூன்று.

வெள்ளை நிற மல்லிகையோ? வே றெந்த மாமலரோ?
வள்ளல் அடியிணைக்கே வாய்த்த மலர் எதுவோ?
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலரு மல்ல.
உள்ளக் கமலமடி உத்தமனர் வேண்டுவதே. (1)

காப்பவிழ்ந்த தாமரையோ? கழுநீர் மலர்த் தொடையோ?
மாப்பிளையாய் வந்தவர்க்கு வாய்ந்த மலர் எதுவோ?
காப்பவிழ்ந்த மலருமல்ல, கழு நீர்த் தொடையுமல்ல.
கூப்பிய கைக் காந்தளடி கோமகனர் வேண்டுவதே. (2)

பாட்டளி சேர் பொற் கொன்றையோ? பாரில் இல்லாக் [கற்பகமோ?
வாட்ட முருதவர்க்கு வாய்த்த மலர் எதுவோ?
பாட்டளி சேர் கொன்றையல்ல பாரிவில்லாப் பூவுமல்ல.
நாட்டவிழி செய்த லடி நாயகனர் வேண்டுவதே. (3)

விவேகானந்தன்.

சிறுமணித் திரள்

ஸ்ரீமான் T. R. ஸ்ரீனிவாசய்யங்கார் எழுதியது

1. அனுதினம் நாம் உண்ணும் உணவு பரப்பிரம்ம சொரூப மாகையால் அதனை நிந்தியாமல் பூசித்துச் சந்தோஷத்துடன் நன்றாகப் பார்த்துப் புகழ்ந்து புசிக்கவேண்டும். இவ்வாறு அன்னத்தைப் போற்றிப் புசித்தலால் நீடிய வாழ்வு, ஆரோக்யம், தைரியம், வலிமை, அழகு முதலியன உண்டாகின்றன. நிந்தித்தாலோ யாவும் இழந்து இறக்க வேண்டிய நிலைமை வந்தெய்தும். சாப்பிடும் போது கை, கால் முதலியன சுத்திசெய்து கொண்டு உட்கார வேண்டியது. தண்ணீர் கொண்டு கால் கழுவி அந்த ஈரம் புலருமுன் புசித்தலால் ஆயுள் விருத்தி யடைகின்றது. படுக்கையில் உட்கார்ந்த வண்ணமும், இடது கையில் வைத்துக் கொண்டும், ஆசனத்தின்மீது இலை போட்டுக் கொண்டும் உணவு கொள்ளக் கூடாது. மயிர், கல், நெல் முதலியன இல்லாமல் உண்டி கொள்ளல் வேண்டும்.

2. ஆயுளை விரும்புகிறவன் கிழக்கு முகமாகவும், கீர்த்தியை நாடுபவன் தெற்கு நோக்கியும், சம்பத்து வேண்டுபவன் மேற்கு முகமாயும், சத்தியம் பேணக் கருத்துடையவன் வடக்கு பார்த்தும் உட்கார்ந்து புசிக்க வேண்டியது.

3. எப்பொழுதும் மிதமாகவே புசிக்கவேண்டும். அதுவும், நன்கு பசியெடுத்த பின்னரே உண்டி கொள்ளல் வேண்டும் 'ஞாலந்தான் வந்திடினும் பசித் தொழிய உண்ணோம்' என்றார் தேரையரும். அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாம். எனவே, மட்டான போசனமே மனதுக்கு மகிழ்ச்சி யளிக்க வல்லது. அரை வயிறு அன்னமும், கால் வயிறு தண்ணீரும், எஞ்சிய இடம் காற்று உலவவும் இருக்குமாறு புசிக்கவேண்டும். காலைப் போஜனம் அதிகமாய்விட்டால் இரவு புசிக்க லாகாது. ஏனெனில், 'லங்கணம் பரமௌஷதம்.' பசியில்லா திருக்கையிலும் மேன்

மேலும் புசிப்பது தீங்கே தரும். அதிகமாகப் புசித்தல் நோயையும், ஆயுட் குறைவையும், சுவர்க்காதி போகக் குறைவையும், புண்ணியக் குறைவையும், உலக நிந்தையையும் உண்டு பண்ணுவதால் இக் கொடிய வழக்கத்தை அறவே நீக்கவேண்டியது. மற்றும், புண்ணுக்கு முதலிய சார மில்லாத வஸ்துக்களைப் புசிப்பதையும் விலக்கவேண்டும்.

4. காமம், குரோதம், லோபம், கூத்து, பாட்டு, சூதாடல், வம்பளத்தல், பழி சொல்லுதல், பொய் பேசல், மாதர்களை ஆசையோடு பார்த்தல், பிறருக்குத் துரோகம் செய்ய நினைத்தல், பொறாமை இவற்றை ஒழிக்க வேண்டியது.

5. வயிற்றுப் பிழைப்பின் பொருட்டு விகடஞ் செய்யலும், துஷ்ட வார்த்தைகள் பேசலும் ஆகா. பொய், டம்பம், கோள் சொல்லல் இவைகள் அற்ற உத்தமமான மார்க்கங்களில் பொருளீட்டிப் பிழைக்க வேண்டும்.

6. தனக்குக் கிடைத்துள்ள தனம், தானியம், பரிஜனம், புத்திர மித்திரர் இவற்றைக் கொண்டு மேலான சந்தோஷத்தை யடைந்து சுவர்க்காதி சுகத்தைத் தேடவேண்டியது. 'போது மென்ற மனமே பொன் செயு மருந்து.' உள்ளது கொண்டு திருப்தியுட னிருப்பவனுக்கே சகல நன்மைகளும் உண்டாகின்றன. மனத் திருப்தி யில்லாதவன் இம்மையிலும் இன்னலுற்று மறுமையிலும் நரகத்தை எய்துகின்றான்.

7. சூரியனை உதிக்கும் போதும், அஸ்தமிக்கும் போதும், உச்சியி லிருக்கும் வேளையிலும், கிரஹணம் பிடித்திருக்கையிலும், ஜலத்தில் பிரதி பிம்பித்திருக்கும் பொழுதும் பார்க்க லாகாது.

8. கன்று கட்டும் கயிற்றை (தும்பை)த் தாண்டக்கூடாது. மேகம் மழை பொழியுங் கால் ஓடக்கூடாது. ஜலத்தில் தன் உருவைப் பார்க்க லாகாது. இவை சாஸ்திர விதிகள்.

9. வழியில் போகும்போது எதிரே மண்மேடு, பசு, தெய்வம், வைதீகப் பிராமணன், நெய்க் குடம், தேன் குடம், நாற்சந்தி, அரசு முதலிய புண்ணிய தருக்கள் முதலி

யன எதிர்ப்பட்டால் அவைகளைப் பிரதக்ஷிணமாகப் போக வேண்டியது.

10. சொந்த மனைவியே யாயினும் மாதர்களை உணவு அருந்துகையிலும், நீர் பருகும்போதும், இருமும் பொழுதும், கொட்டாவி விடுகையிலும், தம் இஷ்டப்படி வீற்றிருக்குங் காலும், கண்ணுக்கு மை யிட்டுக் கொள்ளும் போதும், எண்ணெய் தேய்த்துக் கொள்ளும் பொழுதும், மேல் ஆடையின்றி யிருக்கும் வேளையிலும், பிரசவிக்கும் சமயத்தும் தேஜஸை விரும்புவோன் பார்க்கல் தகாது.

11. விவாக மானவன் ஒற்றை ஆடையுடன் அன்னத்தை உட்கொள்ளக் கூடாது. இடையில் வஸ்திரமின்றி ஸ்நானம் செய்யலாகாது. நிர்வாணமாய்த் துயிலல் அடாது.

12. நடுவழி, சாம்பல், மாட்டுத் தொழுவம், உழுத நிலம், ஜலம், மலை, பாழ்ங் கோயில், புற்று, நிலப்பிளப்பு, ஆற்றங்கரை இவ்விடங்களில் நடந்து கொண்டும், நின்று கொண்டும், வாயு, அக்னி, அந்தணர், ஜலம், பசு, இவைகளைப் பார்த்தபடியும் மலஜல விசர்ஜனம் செய்யக்கூடாது. இவை யொழிந்த ஏனைய இடங்களில் மறைவாக ஒருவருடனும் பேசாமல் அங்க வஸ்திரத்தைத் தலையில் கட்டிக் கொண்டு போகவேண்டியது. பகலிலும், இரண்டு சந்தி வேளைகளிலும் வடக்கு முகமாயும், இரவில் தெற்கு முகமாகவும் மலஜலம் கழிக்க வேண்டியது.

13. நெருப்பையும், விளக்கையும் வாயினால் ஊதக் கூடாது. அசுத்தமான வஸ்துக்களைத் தீயி லிடல் தகாது. காலை அக்னியில் காய்ச்சல் ஆகாது. அக்னியைக் கீழே வைத்துக் கொண்டு உயரமாய்ப் படுத்தலும், அதனைத் தாண்டுதலும், கால் புறம் வைத்துக் கொள்ளலும் விலக்கற்பாலன.

14. சந்தியா காலத்தில் வழி நடக்கவும், சாப்பிடவும், தூங்கவும் கூடாவாம். காரியம் ஏதுமின்றித் தரையைக் குச்சி முதலியவற்றால் கீறலும், காரணமின்றி மண்ணாங் கட்டியைப் பொடி பண்ணுதலும், இரணத்தைக் கிள்ளுவதும், நகத்தைப் பற்களால் கடிப்பதும், கோட் சொல்லுதலும்,

* இவை மனுதர்ம சாஸ்திரம் பிருகு சங்கிதையினின்றும் திரட்டப்பட்டன.

ஆசாரமின்றி யிருத்தல் என்பன வாதி காரியங்களும் அழிவை விளைவிக்கு மாதலால் இவை வெறுத்து ஒழித்திடத் தக்கன.

15. ஜலத்தில், மூத்திரம், மலம், கோழை, எச்சில் வஸ்துக்கள், இரத்தம், விஷம், இவற்றைப் போடக்கூடாது. ஈர வஸ்திரத்தைக் கால்களில் பிழிந்து கொள்ளக்கூடாது.

16. குடியில்லா வீட்டில் தனியாய் உறங்கல் கூடாது. அறிவு, பொருள், அந்தஸ்து இவற்றில் மிக்கோர்களைத் தூங்குகையில் எழுப்பக் கூடாது. தூர ஸ்திரீயுடன் பேசுதலும், அனுவசியமாகப் பிறர் காரியங்களில் தாமாகத் தலையிட்டுக் கொள்ளலும் விரும்பத் தக்கனவல்ல.

17.. இம்மைக்கும், மறுமைக்கும் பயனற்ற காரியங்களைச் செய்தல் தீது. தண்ணீரை இரண்டு கைகளாலும் அள்ளிப் பருகுதலும், பக்ஷணங்களை மடியில் வைத்துக் கொண்டு, புசித்தலும் பிரயோசனமின்றிச் சந்தோஷித்தலும், துக்கித்தலும் வெறுக்கற் பாலன.

18. கையினுல் புஜம், தொடை முதலியன தட்டலும், பல்லை மூடிக்கொண்டு இருமலும், கொழுப்பினுல் நாய், கழுதை முதலியன போல் சத்த மிடுதலும் சரியல்ல.

19. பாதுகை, பாதரட்சை, வஸ்திரம், பூணூல், அலங்காரம், புஷ்பம், மாலை, பாத்திரம் இவைகளுள் அன்னியனொருவனுல் உபயோகிக்கப்பட்ட எதையும் தான் உபயோகிக்கக் கூடாது.

20. சாமத்திற் குட்பட்ட காலை இளம் வெய்யில், பிணத்தின் புகை, பின்னமான ஆசனம் இவற்றை நீக்க வேண்டியது. நகம், மயிர் இவைகளைத் தானுகச் சேதிக்கக் கூடாது.

21. ஊர், வீடு, இவற்றின் வாயிற் கதவு அடைத்திருக்கும் போது வேறு வழியால் அவற்றினுள்ளே பிரவேசிக்கலாகாது. இராக்காலத்து மரத்து அடியில் இருக்கலாகாது. சாப்பிட்ட கையைக் கழுவாமலும், காலீரம் உலர்வதற்கு முன்பும் அமளியில் படுத்த லாகாது.

22. கண்ணுக்குத் தெரியாது அடர்ந்து செறிந்துள்ள புதரில் ஒரு போதும் பிரவேசிக்கக் கூடாது. மல மூத்ராதிகளைப் பார்க்க லாகாது. அன்றியும், மயிர், சாம்பல், எலும்பு,

ஓடு, பஞ்சு, உமி இவைகளில் அறிந்து நிற்கவும், தீண்டலும் கூடாது. இவை ஆயுள் அபகரிக்கும் ஆற்றல் மிக்கவை.

23. இரு கைகளையுஞ் சேர்த்துக் கொண்டு தலையைச் சொரிந்து கொள்ளக்கூடாது. சாப்பிட்டுக் கை, கால் சுத்தி செய்யாமலும் இடது கையாலும் தலையைத் தொடலாகாது. நோயின்றி யிருக்கும்போது தலையின்றி ஸ்நானம் செய்யக் கூடாது.

24. கோப மிகுதியால் ஒருவன் தலை மயிரைப் பிடித் திழுக்கக்கூடாது. ஸ்நானம் செய்த பின்பு எண்ணெய் தேய்த்து முழுகுதலும், வயிறு நிறைய உண்ட பின்பு தண்ணீரில் குளித்தலும் அகற்றத் தக்கவை.

25. நோயாளி தலை முழுகக் கூடாது. பிறப்பு, இறப்பு, கிரஹணம் முதலிய காலங்களி லன்றி மற்றக் காலங்களில் நடு இரவில் ஸ்நானம் செய்யக்கூடாது. எப்போதும் குணந் தெரியாத குளம் முதலியவற்றில் முழுக லாகாது.

26. தெய்வ விம்பங்கள், மாதா, பிதா, விரதானுஷ்டான முள்ளவன், குரு இவர்கள் உருவ நிழலைத் தெரிந்து மிதிக்கவும் தாண்டவும் கூடாது.

27. கண்டதையும், கேட்டதையும் உண்மையாக உரைக்க வேண்டியது. அதுவும் பிறர் நன்மையின் பொருட்டே செய்ய வேண்டும். சத்தியமாக விருப்பினும் ஒருவனுக்குத் துரதிஷ்டமானதையும், பிரியமாக விருப்பினும் அசத்தியத்தையும் சொல்ல வொண்ணாது. இது வேதத்தில் பழமையான தர்மமெனச் சொல்லப்படுகின்றது.

28. கை, கால், கண் குறைந்தவர்கள், ஆறு விரலுள்ளவர்கள், படியாதவர், கிழவர், குரூபிகள், தரித்திரர், ஈனசாதியார் இன்னோரை அவர் தம் குறை சொல்லிப் பரிகசிக்கக் கூடாது.

29. தெய்வத்தை ஒப்புக் கொள்ளாமை, வேதம், பெரியோர் இவர்களைத் தூஷித்தல், பகைமை, டம்பம், அகங்காரம், கோபம், கொடுமை இவற்றை விலக்கவேண்டியது.

30. நல்லொழுக்கத்தால் தீர்க்காயுளும், இஷ்டமான புத்திரர்களும், அழிவற்ற பொருளும் பெறப்படுகின்றன. நன்னடக்கை தீமையை அழிக்க வல்லது. எந்த நற்குறியில்லாவிடினும் நல்லொழுக்கம், அன்பு, பொறாமை யில்லாமை இவைகளைக் கொண்டவன் நீடிய காலம் பெருமையுடன் வாழ்வான்.

31. துராசார முள்ளவன் உலகினரால் நிந்திக்கப்பட்டும், துன்பம் தய்த்தும், பிணியால் பீடிக்கப்பட்டும் இன்னலுற்று முடிவில் அற்பாயுளில் மரிக்கிறான்.

32. அன்னியருக்குத் துரோகம் செய்தல் முதலிய கொடிய செய்கை யுடையவர்கள் ஊழ்வினைப் பயனால் ஏதும் துன்ப முறாது வீடு வாசல், பெண்டு பிள்ளைகளும் பெருகக் கொழித்து இன்புற்று வாழ்வதாகத் தற்போது காணப்பட்டாலும் இறுதியில் யாவும் நீங்கிப் பரிதாபகரமான மரண மெய்துகின்றனர். இன்னோர் நிரயம் புக்கு அலக்கண் உறுவ தல்லாது இவர் தம் சந்ததியாரும் பாவ வினைப் பயனை நுகரவேண்டி நேரிடுகின்றது. எந்நாளும் நீதிநெறி பிறழாது நடப்போருக்குக் குறைவே கிடையாது. 'தர்மம் தலை காக்கும்.' 'சத்தியமே ஜயம்.'

பத்திரிகாபி மானிகளாயும், பதார்த்த குண விளக்கம், சரீர இயல்பு விதி முதலிய நூல் வல்லுநராயு முள்ள அறிஞர் எவரேனும் இவற்றின் கண் ஆழ்ந்துள்ள ஆரோக்கிய (Scientific Principles) சம்மதமான கருத்துக்களை 'லக்ஷ்மி' மூலமே இன்னும் தெள்ளிதின் விவரமாக விரிப்பரென எதிர்பார்க்கின்றனம். ஓம் தத் ஸத்.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

பல்

ஸ்ரீமான் T. R. ஸ்ரீனிவாசய்யங்கார் எழுதியது

எங்கணும் நீக்கமற நிறைந்த முழுமுதற் கடவுளால் அன்புடன் அளிக்கப்பட்டுள்ள சிறந்த இம்மானிட யாக்கைக்குக் கை, கால் முதலிய அவயவங்கள் எவ்வளவு இன்றியமையாதனவோ அத்தன்மையவே பற்களும் என்ற கூற்று உய்த்துணர்ந்து நோக்குவோர்க்கு வியப்பை விளைவிப்ப தாகாது. இயல்பாகவே தேகத்தின்க ணுள்ள ஒவ்வொரு உறுப்புக்கும் ஒரு குறிப்பிட்ட வேலை ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது. தக்க பராமரிப்பின்மையால் அவற்றுள் யாதானு மொன்றிற்குக் கேடு சூழ்ந்தபோது சரீரமானது அதனா லெய்தக் கூடிய பயனை நுகரமாட்டாது இடர்ப்படுகின்றது அனுபவம். அவ்வாறே பற்களுக்கு ஒரு தனித்தொழில் விதிக்கப்பட்டுள்ளது. ஆகவே, அவை சரியான வழியில் பராமரிக்கப் படாவிடின் சீர்கெட்டுப் பற்பல இடுக்கண்களை இழைக்கின்றன. மக்களது ஆரோக்கியத்திற்கும், அழகுக்கும் பற்களானவை எவ்வளவு தூரம் காரணமா யிருக்கின்றன? என்று சற்று சிந்தித்துப் பார்க்கும்போது சாதாரணமாய் அனைவருமே அவற்றின் பால் காட்டிவரும் அசிரத்தை பெரிதும் கவலையை உண்டுபண்ணக் கூடியதா யிருக்கின்றது. பரிசுத்தமான அழகிய பற்கள் மக்களின் அழகாக அமைவதோடு மட்டுமின்றி அன்னோரின் தேகாரோக்கியத்திற்கும் எவ்வாறு காரணமா யிருக்கின்றன என்பதைக் கூடியவரை இச்சிறு கட்டுரையின் மூலம் விளங்கவைத்தலே எமது நோக்கமாகும்.

மாந்தர் தம் வாழ்நாளில் வலிமையோடு வனப்பும் பெற்ற சரீரமுடையோராய் இருக்கவேண்டுவது அத்யாவசியம் என்பதை எவரே அறியாதவர்? ஆரோக்யமற்றவர் எங்ஙனம் அழகும் ஆண்மையும் பெற இயலும்? அழகுடை ஒருவனை எவரும் விரும்புவது கண்கூடாகக் காணும் காட்சி யல்லவா? ஒருவன் அழகு ஒன்றினால் மட்டுமே அனைவரும் தன்னை விரும்புமாறு வசீகரித்துத் தனது காரியங்கள் அனைத்தையும் நிறைவேற்றிக்கொள்ள இயலுமெனின் அதனைப் பெற விழையாதவர் எத்தனை பேர்? ஒருவனது முகத்தின் லட்சணம் - களை - எவ்வளவு வசீகர

சக்தி யுடையதா யிருக்கின்றது? யாரேனும் ஒருவர் பேசுங்கால் நாம் அன்னவரது முகத்தை எவ்வளவு கூர்ந்து கவனிக்கிறோம்? அவரது சொற்கள் நம்மைக் கவர்வதன் முன்னம் அவர் தம் முகப்பொலிவு எவ்வளவு சீக்கிரமாக நம்மை வசப்படுத்திவிடும் ஆற்றல் உடையதா யிருக்கின்றது? இச் செவ்வியன்றோ ஆங்கிலத்தில் Personality என வழங்குகின்றது? அவலக்ஷணமான குறிகளைத் தன்னகத்தே கொண்ட ஒருவரை நாம் எறிட்டுப் பார்க்கவும் எத்தனை அருவருப்புக் கொள்ளுகிறோம்? ஒருவரது தேகாரோக்ய நிலைமையையும் அன்றி அதற்கு நேர்மாறான தன்மையையும் அவருடைய தந்தபந்திகளைக் கொண்டும், சுவாசத்தினாலும் எளிதில் அறிந்துவிடலாம்.

வெள்ளிய பல் வரிசை ஓர் அழகே யாகும். ஆடவர், பெண்டிர் இரு பாலார்க்குமே வெண்மையாய் அழகுபெற அமைந்துள்ள தந்தி பந்தி சோபை ஊட்டுவதாய் மிளிர்கின்றது. மென்னகை புரிகையில் செம்பவள இதழினூடே சற்று வெளிப்பட்டுத் தோன்றலாகும் கோதில் பற்களின் செவ்வியை முத்துக்களோ, அன்றி முல்லை அரும்புகளோ அல்லது முளை நில வொளியோ என்று கவிவாணரு மன்றோ வியந்து புகழ்ந்து பாடியிருக்கின்றனர்? எவ்விதமான குற்றமுமில்லாத வெள்ளெயிற்று வரிசையைத் தன்னகத்தே பெற்றொளிரும் ஆனனத்தினின்று எழும் புன்னகைக்கு மாந்தரில் எவரே வயப் படாதவர்? மகளிர்க்கே பற்களின் லட்சணம் ஒரு பெருமையாய் அமைந்துள்ளது என்பது புலவர்கள் கூற்றினின்றும் விளங்குகின்றது. பொற்புறு மடந்தையர் தம் புன்சிரிப்பினுக்கு எத்தனைபேர் அடிமைகளாகி விடுகின்றனர்? முகத்தினுக்கே ஒரு அரிய சோபையைத் தந்தொளிரும் பற்களின் மாட்சிமைதான் என்னே! இனி, நேர்மாறாக, பொக்கையாய்ப் போய் வரிசையாயில்லாதனவும், அசிரத்தை காரணமாய்ப் பாசி படிந்து ஒளி குன்றிப் போனவுமான பற்கள் முகத்தின் காந்தியை எவ்வளவு தூரம் குறைத்து விடுகின்றன? இவ்வாறான தந்தபந்தி யுடையோரை எவ்வளவு அருவருப்புடன் வெறுத்தொழிக்க நம் மனம் நாடுகின்றது? இன்னும் இயல்பாகவே இரண்டொரு பற்கள் சற்று முன் போந்தோரின் முகலட்சணமும் பொலி விழக்கின்ற தல்லவோ? நம்மில்

ஒரு சிலரே தமது பற்கள் விஷயத்தில் மிகுந்த சிரத்தை யெடுத்துக்கொண்டு அவற்றைப் பெரிதும் பேணிவருகின்றனர் என்றும் மற்றையோர் பலரும் அவற்றின்பால் கவலை எடுத்துக்கொள்வது அனுவசியம் என்ற எண்ணத்தினல் அவைகளின் பராமரிப்பில் மிகவும் அசிரத்தை கொண்டோரா யிருக்கின்றனர் என்றும் சொல்வது மிகைபடக் கூறுவ தாகாது. அநேக காரியங்களைச் சுலபமாய்ச் சாதித்துக்கொள்ள உதவுவதும், பொருளின்றிப் பெறத்தக்கது மான அழகு என்னும் பெரும் பொருளைப் பெற முயலாது வாழும் மக்களின் அறியாமைதான் என்னே! எனவே ஆண், பெண் இரு பாலாரும் அழகு என்னும் அருநிதியம் இன்றியமையாதது என எண்ணுவரேல் இன்று முதற்கொண்டேனும் அழகு ஊட்டுவதாகும் பற்கள் விஷயத்தில் மிகவும் கவனமாயிருந்து அவைகள் ஒளி, உறுதி முதலியன பெற்றிருக்க வேண்டியதற்கான முறைகளைக் கையாள வேண்டும்.

மேலே பற்கள் எங்ஙனம் மக்களுக்கு அழகாய் இலங்குகின்றன என விவரித்தோம். இனி, இரண்டாவதாக, அவைகளுக்கும் தேகாரோக்யத்திற்கும் உள்ள நெருங்கிய சம்பந்தத்தைக் கவனிப்போம். பற்களின் உபயோகந்தான் யாது? என்ற வினவுக்குக்கு எதும் ஆலோசனை வேண்டாமலே, உண்வை உட்கொள்ளுவதற் கனுகூலமாகக் கூறுபடுத்தித் தருவதே என்ற விடை பிறக்கின்றது. சாதாரணமாய் இதுதான் மேலாக எவரும் அறிந்தது. ஆனல் ஆழ்ந்து கவனிக்கும் பொழுது பின்னெரு முக்கியமான விஷயமும் புல னுகின்றது. நாம் ஆகாரம் கொள்ளும்போது பற்களும் நாவும் ஒருங்கே வேலை செய்கின்றன. கடினமான உணவை மெல்லுவதால் அது மிகவும் மிருது வாகிறது. இவ்வாறு உணவை நன்ருய் மெல்லுகையில் நாவின்கீழ் உள் தாடையில் உள்ள உமிழ் நீர் சுரக்கும் பைகளி (Salivary glands) னின்றும் உமிழ் நீரானது அபரிமிதமாய்ச் சுரக்கின்றது. இது போதுமான வரை ஏற்கெனவே பற்களின் உதவியால் மிருதுவான உண்டியோடு கலக்கும்போது ஆகாரம் அரைத்த மாவைப் போல் மிருதுவாயும், பொடியாயும் எளிதில் விழுங்குதற் கேற்றவாறு ஆய்விடுகின்றது. அன்றியும் நாம் உட்கொள்

ளும் ஆகாரத்திலுள்ள Starch என்னும் பதார்த்தம் உமிழ் நீரோடு சம்பந்தப்படுவதால் சர்க்கரையாய் மாறி இனிய சுவை பயத்தலுமன்றி இரத்தத்திலும் எளிதில் சேருகின்றது. இந்த Starch என்னும் பதார்த்தமே தேகப் போஷிப்புக்கான உஷ்ணத்தை யளிப்பது. இவ்வாறு நன்ருய் மெல்லப்பட்டு மிருதுவாய்ப் போதுமான உமிழ் நீரோடுங் கலந்த உணவுதான் எளிதில் ஜீரண மாகி உதிரத்தோடு இரண்டறக் கலந்து விடுகின்றது. ஆகாரம் இரைப்பையில் சேர்ந்த பின்பே ஜீரண மாகின்றது என்ற தப்பான எண்ண முடையவர்கள் இனியேனும் ஜீரணித்தல் என்பது வாயினின்றே தொடங்குகின்றது என்பதைச் செவ்வி தின் உணர்ந்து முறைப்படி நடந்து கொள்வாரானுல் அஜீர்ணம் முதலான பொல்லாங்குகளைச் சுலபமாய்த் தவிர்த்துக் கொள்ளக் கூடும். ஆகவே, போதுமான உமிழ் நீரோடு கலந்து நன்ருய் மென்று மாற்றப்பட்ட உணவுதான் இரைப்பையில் சேர்ந்ததும் எளிதில் ஜீரணித்து இரத்தமாய் மாறுகின்றது என்பது வெளிப் படை. எவ்வளவுக் கெவ்வளவு நாம் ஆகாரத்தைச் செவ்வையாய் மெல்லுகிருேமோ அவ்வளவுக் கவ்வளவு அதிகமாகச் சுரக்கும் உமிழ் நீருடன் உணவு கலந்து விடுகின்றது என்ருல் பற்கள் சரியான பராமரிப் பின்மையால் வலியிழந்து நன்ருய் உணவை மெல்லாது போனுல் Starch என்ற பதார்த்தம் சர்க்கரையாக மாறக்கூடிய நிலை ஏற்படா தென்பதும், அது காரணமாக இரைப்பையில் ஜீரணக் கருவிகளுக்கு அனுவசியமான அதிக வேலை ஏற்பட்டு அவை நாளடைவில் இயல்பாக உள்ள தமது சக்தியையும் இழந்து போதலால் அஜீர்ணம், மற்றும் அதன்வழி நோய் பல உண்டாகின்றன என்பதும் உள்ளங்கை நெல்லிக் கனி யல்லவா? எனவே, அதிக அவசரமின்றியும், அதிக மெதுவாக இல்லாமலும் கூடியவரை உணவை மனே நிம்மதியாக நன்ருகமென்று சாப்பிடப் பழகி நீடிய ஆயுள் பெற்றுத் தேகாரோக்யமாய் வாழ நாம் ஒவ்வொருவரும் முயலவேண்டும்.

மேலும் பற்களாலான உபயோகங்கள் இரண்டு உள. முதலாவதாக, அவை நமக்கு வார்த்தைகளைத் தெளிவாகக் கூறவும், எழுத்துக்களைச் சரியாக உச்சரிக்கவும் பெரிதும் உதவி புரிகின்றன என்பதாம். இக்கூற்று, மதலை மொழி

யையும், முதியோர் உரைகளையும் நோக்குமிடத்தும் பெரிதும் உறுதி பெறுகின்றது. பற்களின் மேன்மையைக் கடவுள் நமக்கு அவற்றை நாம் பிறக்கும் போதேகூட அளித்தருளாததாலும், அந்திக் காலத்து அவைகளை இழக்குமாறு செய்தருளுவதாலும் நன்குணர வேண்டும். இறுதியாக, சுவாசம் சுத்தமாய் யாதொரு துர்க்கந்தமுமின்றி இருப்பதற்கு நன்கு பாதுகாக்கப்பட்ட பற்கள் மிகுதியும் துணை செய்கின்றன என்பது எவரும் அனுபவத்தில் அறிந்திடத் தக்கதொன்றாகும். சிலர் நம்மிடத்துப் பேசுகையில் அன்னாரது வாயினின்றும் ஒருவகையான துர்நாற்றம் எழுவதை உணர்கிறோம். இஃது அவர்களது பற்களின் சீர்கேடான நிலைமை காரணம் பற்றியே யாகும். நன்றாய்ப் பாதுகாக்கப்பட்டுப் பரிசுத்தமாய் வைக்கப்படாத பற்கள் வாயினுக்கு ஒரு வித கெட்ட நாற்றத்தை உண்டுபண்ணுகின்றன. இதனையே வாய்நாற்றம் என்பது. உண்ட உணவில் பல் இடுக்கிலும், ஈறுகளின் அடியிலும் தங்கு மவற்றை அனுதினம் பல் துலக்குகையில் சரியானபடி வெளிப்படுத்தாதிருத்தலே இதற்குக் காரணமாகும். இவ்வாறு இவை தங்க விடுவதால் நாளடைவில் வாய்நாற்றமே யன்றிப் பல் வலி, பல் சொத்தை, பல் ஆட்டம், ஈறு தடித்தல், வாய்ரணம் முதலியனவும் உற்றுப் பெருந்துன்ப மேற்படுகின்றது. இதுகாறும் கூறிப்போந்த வற்றினின்றும் பற்களின் அருமை, பெருமை தெள்ளிதின் விளங்கியிருக்கலாமென நம்புகிறோம்.

கடைசியாகப், பற்களைச் செவ்வனே பாதுகாப்பதற்குரிய வழியான தந்த சுத்தி என்பதைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூறிவிட்டு இவ்வியாசத்தை முடிப்போம். பல்விளக்கல் என்பது காலைக் கடன்களுள் ஒன்றாக நம் இந்துக்களால் போற்றப்பட்டு வருகிறதெனினும், அது முறை பிறழ அனுட்டிக்கப்பட்டு வருவதே வருந்தற் குரியதாகும். பல் துலக்கல் என்றால் செங்கற்பொடியோ, மண்ணோ, சாம்பலோ எது கையில் அகப்பட்டதோ அதைக் கொண்டு மேலாகத் தேய்த்து வாய் கொப்பளித்து விடுதல் என்று பலரும் எண்ணி இடர்ப்படுகின்றனர். இவ்வாறு செய்வதால் விளையுந் தீங்குகளை ஏற்கெனவே மொழிந்தாய் விட்டது. எனவே, அதி காலையில் அனுதினம் விழித்தெழுந்து

ஜலமல பாதைகளை நிவர்த்தி செய்து கை, கால் சுத்தி செய்து கொண்டதும் தந்த சுத்திக்கான பொடியோ, அன்றிக் கொம்போ, இன்றேல் இலையோ கொண்டு கிழக்கு முகமாக வேனும் தெற்கு முகமாகவேனும் வீற்றிருந்து பல்லின் புறத்தையும் உட் பக்கத்தையும் செவ்வையாகச் சுத்தி செய்ய வேண்டும். பின்பு உண்ணுக்களவாகக் கை விரல்களை ஒட்டி நாக்கை வழித்துப் பன்னிரண்டு தரம் ஜலம் கொண்டு இடப்புறத்திலே கொப்பளித்து முகத்தையும், கை கால்களையும் கழுவிக்கொள்ள வேண்டும். 'ஆலும் வேலும் பல்லுக் குறுதி' என முதுமொழி இருத்தலால் இவைகளின் குச்சியையோ, அன்றி இவற்றின் பட்டைகளாலான பொடியையோ உபயோகித்தலே சாலவும் சிறந்ததாம்: குச்சிகொண்டு தேய்ப்பதானல் மிருதுவாய்ச் செய்துகொண்டு ஈறுகளுக்கு ஏதும் காயமுண்டாகாதவாறு கவனமா யிருக்கவேண்டும். செங்கல்லினலேனும், சாம்பரினலேனும், மணலினலேனும், பட்டமாத்திரத்தினலேனும் தந்த சுத்தி செய்யக்கடவது. நின்றுகொண்டாவது, நடந்து கொண்டாவது, போர்த்த வண்ணமாவது பல் விளக்கக்கூடாது. 'செய்வன திருந்தச் செய்' என்ற ஔவை உரையை உணர்த்துவதோடு இவ்வியாசத்தை இனிது முடிக்கின்றோம். பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

'நன்மைக் கடைப்பிடி ;
தீவினை அகற்று'

பூலோகத்தில் பெரிய மாளிகை

அமெரிக்கா நியூயார்க்கில் பூலோகத்திலே மிகப் பெரிய கட்டிடத்தை ஆஸ்கர் கோங்கில் என்ற கோடீஸ்வர வியாபாரி கட்டப்போகிறார். அதில் 65-மாடி யிருக்கும். உயரம் 800 அடி. பேர் பெற்ற உல்வொர்த் கட்டடத்தை விட 8 அடி அதிக உயரம். இதில் நவீன விடுதி ஒன்று ஏற்படும். இதில் 4500 அறைகள் இருக்கும். சிங்காரத்தோட்டங்களும், பாங்கும், 2000 பேர் சாப்பிடக்கூடிய போஜன சாலையும் அமைந்திருக்கும். பூமியைத் தவிரக் கட்டடத்திற்கு முப்பது லட்சம் பவுன் செல்லுமாம்.

பானுபாய்.

VII

(ஸ்ரீமான் ஏ. சோக்கலிங்கம் பிள்ளை எழுதியது.)

299-வது பக்கம் (தொடர்ச்சி.)

அநந்தராய் உட்கட்டிற் போய்த் தனது குரு பத்தினியின் பாதத்தில் வீழ்ந்து வணங்கினான். அவர்களோடு பேசுவதற்கு வாயெடுத்தான். ஆனால், அவனுக்குத் துக்கத்தால் நெஞ்சடைத்துப் பேச முடியவில்லை. அவன் பேசுவதற்கு மேலும் மேலும் தன்னாலானமட்டும் பார்த்தான், அது முடியவில்லை. அவன் துயரம் பொறுக்கலாற்றாது தரைமீது தலை கவிழ்ந்து அழுதுகொண்டேயிருந்தான். பிறகு, தலை நிமிர்ந்து கதவின் பக்கத்தில் நின்றிருந்த பானுபாயைப் பார்த்தான். அவள் அசைவற்றுக் கண்ணிமை கொட்டாது வாய் பேசாது பொன்னாற் சமைத்த பதுமை போல நின்றிருந்தாள். ஆனால், அவள் செவ்விதழ்களிற் புன்னகை தோன்ற முகம் பொலிவுற்றிருந்தது.

அவன், பானுபாயிடம் பிரயாண விடை பெறுவதற்கெண்ணித் தனது வாயைத் திறந்து சொல்லப் போனான், அது அவனாற் கூடவில்லை. உடனே தன் குருவின் வீட்டை நீங்கி மிகு விரைவாகச் சென்றான். அவன் பின்னேடே காலு சர்தாரும் அவன் கூட்டத்தாரும் தங்கள் தோளின் மேற் றடிகளைத் தூக்கிப் பிடித்த வண்ணம் அவனைத் தொடர்ந்தனர். அது அவனுக்குத் தெரியாது.

அவன் சிறிது தூரஞ் சென்றதும், தனக்குப் பின்னே காலடி சத்தங் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். காலு சர்தார் வருவதைக் கண்டான். "இது என்ன? நீங்கள் ஏன் என் பின்னேடு வருகிறீர்கள்" என்றான்.

அதனைக் கேட்ட காலு "எஜமானரே! தங்களிடத்தில் எப்போதும் சிலர் இருப்பது நல்லதாகும். தாங்கள் கட்டளை யிடுவீர்களாயின் நாம் போகும் வழியில் இன்னுஞ் சிலரைச் சேர்த்துக் கொள்வேன். ஐய! தங்கள் அநுக்கிரகத்தால் எனக்குப் பயந்து நடக்கிறவர்கள் அநேக ரிருக்கின்றார்கள்" என்று விடை கூறினான்.

அநந்தன் கண்களில் நீர் ததும்பியது. துக்கத்தால் அடைத்த குரலுடன் "காலு! நான் தனிமையாய்ப் போவேன், கொள்ளைக்காரருக்குத் தலைவனாக மாட்டேன். படானியரை ஒடுக்குவதற்கு நான் ஒருகாலுங் கொள்ளை யடிப்பவனாகேன். நீயும் இவ்விர்த்தியை அறவே விட்டு, முன்னிருந்தது போல விவசாய விர்த்தியை எடுத்துக்கொள்வாய்" என்றான்.

"ஐய! நான், தாங்கள் கூறுவதற்கு மாறு சொல்லேன். இது வரையும், நாங்கள் நமது தேசத்தாருடைய பொருளையே கொள்ளை யிட்டோம், இனி உங்களோடு சேர்ந்து படானியருடைய பொருள் களைக் கொள்ளை யடிப்போம்" என்றான் காலு.

"காலு! அது ஒருக் காலுங் கூடாது. நான் கொள்ளையடித் தற்கு இடங் கொடுக்கமாட்டேன். எனக்குச் சமயம் வாய்க்குமா யின் கொள்ளைக் கூட்டத்தாரை வேரோடு களைந் தெறிவேன்."

"ஐய! உங்கள் கட்டளையின்படியே."

"காலு! நீ வீட்டிற்குப்போ" என்றான் அநந்தன்.

"ஐய! நான் தங்கள் உத்திரவைக் கடக்க மாட்டேன். நான் தலைமுறை தலைமுறையாக உங்கள் வாரக் குடியானவனா (Tenant) யிருக்கிறேன். உங்கள் பின்னேடு ஒருவனேனும் வருவதற்குச் செலவு கொடுக்க உங்களைக் கெஞ்சிக் கேட்கின்றேன், அஃது உங்க ளுக்கு நலமாகும்."

"காலு! எனக்கு ஒரு வேலைக்காரனும் வேண்டாம். நீ வீட்டுக்குப் போ."

"ஆனால், தாங்கள் எனக்கு ஏதேனும் வேலை யிடுங்கள். அது எதுவாயினும் ஆகுக. நீங்கள் காலாலிட்ட வேலையைத் தலையாற் செய்யக் காத்திருக்கின்றேன்" என்று தளர்ந்த மனத்தோடு கேட் டான் காலு சர்தார்.

அதனைக் கேட்ட அநந்தன் சிறிதுநேரம் யோசித்து "காலு! பானுபாய் எனது குருவின் வீட்டி லிருக்கின்றாள். அவளுக்குப் பிறரால் யாதொரு இடைஞ்சலும் நேராதபடி காத்துவருதல் வேண்டும். இது தான் நான் உனக்கு இடும் வேலையாகும்" என்று சொல்லி விரைவாக நடந்து சென்றான்.

அவன் செல்லுகையில் பின்னாற் திரும்பிப் பாராமலே விரை வாக நடந்தான். அவனுக்குப் பின்னால் காலடிச் சத்த மொன்றுங் கேட்கவில்லை யாதலால், காலு சர்தார் தன்னைப் பின் தொடர வில்லை யென்பதைத் தெரிந்தான். ஆயினும், அவன் போகும்வழியில் தடை உண்டாயிற்று, தான் நேரே செல்லும் வழியை விட்டுத் திரும்பி வடக்கு நோக்கிச் செல்லுகையில் ஒருவன் அவனுக் கெதிரே வந்து அவனைச் செல்ல விடாமல் நிறுத்தினான். உடனே அநந்தன் வியப்புற்றுத் திகைத்து நின்றான். அவன் முகத்தை பார்த்தும் அவன் வித்தியார்னவன் எனக் கண்டு கொண்டான். அவன் உடம்பில் வேர்வை ஒழுகிக்கொண்டிருந்தது, கால்களில் மிகவும் தூசு படிந் திருந்தது. பேசுவதற்குக் கூடாமல் நெடுமூச் செறிந்து நின்றான். இதனாலே, அவன் அநந்தனைப் பின்

தொடர்ந்து பிடிப்பதற்குக் குறுக்கு வழியாக வயல்களில் வீழ்ந்து ஓடிவந்தா னென்பது தெளிவாய்த் தெரிந்தது. அநந்தன் அவனை அந் நிலைமையில் கண்டதும் " நீ ஏன் இவ்வளவு அவசரமாக ஓடி வந்தாய்? குருதேவர் என்னை அழைத்துவரச் சொன்னாரா என்ன ? " என்று கேட்டான்.

வித்தியார்னவனுக்கு இன்னும் பெருமூச்சு நிற்கவில்லை. " உனக்கு ஏ னிப்படி பெருமூச்சு வாங்குகிறது ? என்ன சங்கதி ? சீக்கிரஞ் சொல் " என்றான் அநந்தன்.

அதனைக் கேட்ட வித்தியார்னவன் பிரயாசையோடு "நானும் உங்களோடு கூட யுத்தத்திற்கு வருகிறேன் " என்றான்.

" என்ன சொல்லுகிறாய்? தெளிவாய்ச் சொல் " என்று அநந்தன் கேட்டான்.

அதற்கு வித்தியார்னவன் தைரியத்துடன் " படானியரை நிர்மூலமாக்க நான் சித்தமா யிருக்கின்றேன்" என்றான்.

" நீ பிராம்மணருள் பண்டித னாயிற்றே" என்றான் அநந்தன்.

" அதைப்பற்றி உனக்காவ தென்ன? என்னுடம்பில் போது மான பல மிருக்கிறது " என்று சொல்லி தனது பருத்த புஜங் களையும் நீண்ட கைகளையும் விரித்துக் காட்டினான்.

" வித்தியார்னவ! உனக்கிருக்கும் அநுதாபத்திற்காக வந்த னஞ் செய்கின்றேன். நீ பெரிதும் என் சகோதரனே யாவாய். நாம் இருவரும் ஒரு குருவினுடைய மாணக்கர்களே. உன்னை உட் காரவைத்து வணங்கவேண்டும். நீ பெரும் படிப்பாளி, கேள் சொல்லுகின்றேன். நான் படானியரைத் துரத்தப்போவதில்லை. நமது தேச ஜனங்களை ஒன்றுபடுத்த வேண்டு மென்பதே எனது காரியமாகும். நமது தேச ஜனங்கள் உணர்ச்சி யின்றி வாழ்ந்து வருகின்றனர். அதனாலே, நான் வீடு வீடாய்ப் போய், என்னு டைய சகோதரர்களை நமது தாய்நாட்டின் பொருட்டேனும் அவர் களை ஒன்றுசேரச் செய்யப் போகிறேன் " என்றான் அநந்தன்.

அதனைக்கேட்ட வித்தியார்னவன் தலையசைத்து " அது முடி யாத காரியம். வாய்ப்பேச்சால் காரிய மாகாது " என்றான்.

" இவ்விஷயத்தில் நமது தேசம் முயலாவிட்டால் " என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே வித்தியார்னவன் அநந்தனைப் பேச விடாமல் நிறுத்தி " அது முடியாது முடியாது " என் றான்.

" நல்லது பார்ப்போம். நீ தயவுசெய்து பானுபாயைப் பார்த் துக்கொள் " என்று அநந்தன் சொன்னதும், வித்தியார்னவன் " அது முடியாது " என்று சொல்லிவிட்டு ஓடிப்போனான்.

வித்தியார்னவன் சொன்னதைக் கேட்ட அநந்தன் பெரிதும் மனங் கலங்கினவனாய், "வங்காள ஜமீன்தாரர்களை ஒன்றுசேர்க்கும் முயற்சி வீண்படுமோ" என்று சிறிதுநேரம் யோசித்துநின்று, பிறகு அவ்விடத்தைவிட்டு நகர்ந்தான்.

VIII

ஒருவன் உலகானுபவ முடையவ னாயின் அவனே எந்தக் காரியத்தையும் அறிந்து நடக்கக் கூடிய மனிதனாகின்றான். அவன் இளமைப் பருவத்தில் தன்னுடைய மனத்தில் பல எண்ணங்களை அன்போடு வளர்த்துக் கனா வுலகத்தில் பெரிய அரண் கட்டி மனோ ராச்சியஞ் செய்து வாழ்கின்றான். அவன் வயதில் முதிர்ந்து போராட்டத்திற் கிடமாகிய உலக வாழ்க்கையி லிறங்கும்போது, கடுமையான சம்பவங்களையும் பிரதிகூலங்களையும் எதிர்ப்படுகின்றான். அப்போது, மனிதனுடைய வாழ்க்கை மலர்ப் படுக்கை யாகாமல் முட் படுக்கை யாகுமென்பதை அவன் அறிகிறான். அவ்வாறு பிரதிகூலங்க ளென்னும் அலைகளால் மோதுறும்போது, தன் வாழ்க்கையில், தான் விரும்பும் எல்லாக் காரியங்களும் நிறைவேறுகிற தில்லை என்னும் அனுபவ ஞானத்தை அடைகிறான். சிலர் இவ்வித ஏமாற்றங்களால் மன வெறுப்புக் கொண்டு, உலக காரியங்களி னின்றும் விலகிக் காணாமற் போய்விடுகிறார்கள். ஆனால், எவர்கள் அவ்வித ஏமாற்றங்களுக் கெல்லாம் மனம் பொறுத்துத் தைரியத்தோடு நிற்கின்றார்களோ, அவர்களே வரவர அனுபவ மடைந்து, முடிவில் உண்மையில் ஞானமுள்ளவர்க ளாகிறார்கள்.

அநந்தராய்க்கு உலகத்தைப் பற்றிய எண்ணமே கிடையாது. ஆதலால், அவனுக்கு உலக காரியங்களில் அனுபவமில்லை. அவன், பெற்றோருக்குச் செல்வப் புதல்வனா யிருந்து வளர்ந்து வந்தவன். அவன் துன்ப மின்ன தென்பதையும் துக்க மின்ன தென்பதையும் அனுபவித் தறியான். பிறர் துயரங் கண்டால் நெருப்பிலிட்ட இழுதுபோல அவன் மனம் உருகும். தேசமெங்கும் தொலையா வறுமைப் பிணி பரவி மக்கள் வருந்துகின்றனரே யென்று, அவனது தூய்மையான மனந் தளர்ந்து கண்களில் நீர் ததும்பும். நாடெங்கும் ஜனங்களை முன் பின் பாராது ஒறுத்தலும், கொடுங்கோன்மையு மாகிய காட்சியைக் காண்பதும் அவனுக்குப் பொறுக்க முடியாத துக்கமா யிருந்தது. அவனது விருப்ப மெல்லாம், அடிமைத்தனமாகிய சிறையிலிருந்து, தன் தாய் நாட்டை விடுதலை செய்து, இந்து ராச்சியத்தைத் தாபித்துத், தேச ஜனங்களில் வங்காளியரை உயர் பதவியில் வைக்க வேண்டுமென்பதே யாம். இது தான் அவன் பேராசைக் கனா. இதுதான் அவன் உயிரின் நோக்கம். இதுதான் அவன் உட் கருத்து.

அநந்தராயன் நண்பினரும் அவனது நன்மையைக் கோரிய வர்களும் அவனுக்குப் புத்திசொன்ன உடனே, அவர்கள் சொற் படியே அவன் தன் வீட்டைவிட் டகன்ருன். அவனுடைய நம் பிக்கையுள்ள பணியாளன் சுதரிசன தாஸ் என்பவன் ஒரு பையில் பொன் நாணயங்களைப் போட்டு, அவன் இடுப்பிற் கட்டினுன். சுதரிசன தாஸ், தன் எஜமானனது விலையுயர்ந்த மற்றப் பொருள் களை அவரது அழகிய தோட்டத்தினுள்ளே ஓர் மூலையில் ஒருவருங் காணுதபடி மண்ணின் கீழ்ப் புதைத்து வைத்தனன். நம்பிக்கை யுள்ள அப்பணியாளனைப் பற்றி வேருென்றுந் தெரியவில்லை. அநந்தன் இடுப்பிற் கட்டிய நாணயங்கள் காணவில்லை. அவை எவவாறு போயிற்று? அவன் தாயின் சவத்தை ஈமவிறகின் மேற் கிடத்தியபோது, அவன், மகமதிய சக்கரவர்த்தியின் பெயர் அப் பொன் நாணயங்களின்மேல் எழுத்திட் டிருந்ததினுல், அவற்றின் மேல் அருவருப்பும் வெறுப்புங்கொண்டு அவற்றைத் தூர எறிந்து விட்டான். அதனுல், அவன் பணத்தையும், உதவியையும், துணை புரிவாரையு மிழந்து, உண்மையில் தெருத் தெருவாக இரந்து திரியும் பிச்சைக்கார னுயினுன். ஆனுல், அவன் தந்தைக்குச் சொந்தமான படைப் பயிற்சிக்குரிய வாளாயுத மொன்றே அவனுக் குப் பெருந்துணையா யிருந்தது. அன்றியும், அவனிடத்தில் பலம் பொருந்திய வில்லொன்றும், நஞ்சூட்டிய கூரிய அம்புகள் பொதிந் துள்ள அம்பருத் தூணியு மிருந்தன.

மேற்சொன்ன ஆயுதங்களுடன் தன்னுயிர்க்கே ஆபத்தான பிரயாணஞ் செய்ய முயன்று ஒவ்வொரு கிராமத்துக்கும் போகத் தொடங்கினுன். அவன் அவ்வாறு அலைச்சற் பட்டாலும், அவன் ஆகாரத்திற்கு வருந்த வில்லை. ஏனெனின் வங்காளதேசம் விருந் தோம்பலில் புகழ்பெற்றது. ஒவ்வொருவரும் அவனைத் தாராள மாக வரவேற்றுப் பேரன்போடு உபசரித்தனர். அவ்வாறு ஜனங் கள் அவன்மீது அன்புகொண் டிருந்தும், அவ னெண்ணம் நிறை வேற வில்லை. அஃதாவது, எக்கருத்தைக் கொண்டு, ஒரு கிராமத்தி திருந்து மற்ருெரு கிராமத்திற்கும், ஒரு வீட்டிலிருந்து மற்ருெரு வீட்டிற்கும் அலைந்து திரிந்தானே அது முடிய வில்லை. அதனுல், அவனுக்குத் தன் எண்ணம் நிறைவேருமற் போயிற்றே, இன் னும் பொறுத்தாகிலுங் கைகூடு மென்கிற நம்பிக்கையு மில்லையே என்னும் ஏக்கம் அவனை மேற்கொண்டு விட்டது. இவ்வித அனுபவமே, இனி நம்பிக்கையில்லை என்றும் பாடத்தை அவனுக் குக் கற்பித்தது. அக்காலத்தில் படானியர், ஜனங்களை ஓயாமல் திகிற்படச் செய்தனர். ஜனங்களும் படானியர்க்கு விரோதமாக ஒரு பேச்சும் பேசத் துணியவில்லை. அவ்வாறிருக்க, அவர்களைத் தேசத்தைவிட்டுத் துரத்துவ தெப்படி? சிறிய ஜமீன்தாரர்க ளெல் லோரும் அநந்தனுக்காக அனுதாபப் பட்டார்கள். இரக்கமற்ற

பட்டானியருடைய கொடுமையினுல் மிக்க பரிதாப நிலைமைக்குக் கொண்டுவரப்பட்ட அவனைக் காண்பது, அவர்களுக்கு அதிக வருத்தமா யிருந்தது. அவர்களும் படானியரால் துன்புறுத்தப் பட்டார்கள். ஆதலால், அவர்கள் அனுதாபம் பெரிதாயும் உண்மையுள்ளதாயு மிருந்தது. அவன் பால் அவர்களுக்கு அனுதாபமும் ஒத்த உணர்ச்சியு மிருந்தும் அநந்தனுக்கு அவர்கள் உதவிபுரியக் கூடாமற் போயிற்று. அவர்கள் படானியர்க்குக் கோபத்தை உண்டாக்கத் துணியவில்லை. ஏனெனில், அவர்கள் பயங்கரமான படானியர் மேல் கையெடுக்கத் தாங்கள் பல வீனர்களென்று உணர்ந்தார்கள். அவர்க ளெல்லோரும் ஒன்று சேர்ந்து முன்னுக்கு வருவது நம்புவதற் கிடமில்லா மலிருந்தது. ஏனெனில், அவர்கள் நெடுங்காலம் அன்னியர் ஆளுகையின் கீழிருந்தமையால், ஒற்றுமை சாத்திய மென்பதையும் அதனுல் பலனுண்டாகக் கூடிய தென்பதையும் மறந்து விட்டனர். ஆதலின், வங்காளத்திலுள்ள ஜமீன்தாரர்களை ஒன்று சேர்க்கக் கருதிய அநந்தனுடைய முயற்சி வீணுயிற்று.

செல்வாக்குள்ள பெரிய ஜமீன்தார்க ளெல்லோரும் வலிமையுடைய சுயாதிபதிகளா யிருந்தார்கள். அவர்கள் ஒருவருக்குங் கீழ்ப்படியாதவர்களாய் தங்கள் காரியங்களைத் தாங்களே நடத்தி வந்தார்கள். அவர்களுடைய அதிகார முறையில் படானியர் தலையிடத் துணியவில்லை. ஆனுல், அவர்கள், அவர்களோடு நட்புக் கொண்டிருந்தனர். அநந்தன் தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளும்பொருட்டு ஜமீன்தாரர்களை நெருங்கியபோது, அவர்கள் அவனைப் பரிகசித்தும், இகழ்ந்து பேசியும், பைத்தியக்காரனைப் போல நடத்தியுந் துரத்திவிட்டனர்.

இவ்விதமாகப் பெரிய ஜமீன்தாரர்கள் இரக்கமற்றவர்களாயும், சிறிய ஜமீன்தாரர்கள் சுயகாரியப் புலிகளாயும் திறமை யில்லாதவர்களாயும் இருந்தார்க ளாதலால், அநந்தன் தன்னுயிருக்கு என்ன ஆபத்து வந்தாலும் வரட்டுமென்று மனந் துணிவுகொண்டான். அவன் சென்ற இடங்களிளெல்லாம் அவனெண்ணம் நிறைவேருமல் ஏமாந்து நின்ருன். அவனை எல்லோரும் பரிகசித்து நிந்தித்தனர். தேசத்தி லெங்கும் அவனை ஆதரிப்பா ரில்லை. தேச முழுதும் சுய நன்மையும், பொருமையும், வன்மமும், பகைமையும், பிரிவினையும், வஞ்சகமும் நிறைந்திருந்தன. வங்காளத்தில் சுயகாரியங்களிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து தேசத்தைப் பாழாக்கிய இராக்கதக் கூட்டத்தைத் தவிர அறிவுடைய மனிதனெருவனுமில்லை. ஜனங்கள் அறியாமையில் தோய்ந்திருந்தார்கள். போதிய கல்விப் பயிற்சியும், அறிவு விளக்கமுமில்லா திருந்தார்கள். தேசத்தில் உண்மையான கல்வி யில்லை. ஆதலால் அநந்தன், அஞ்ஞானத்தையும் மூடபக்தியையுந் தவிர வேருென்றையுங் காணவில்லை.

அதனல், தேச ஜனங்கள் மூடர்களாயும், தன்னலத்தையே பெரிதுங் கருதுபவர்களாயு முள்ள அவர்களிடமிருந்து, தன்னுடைய மேலான தேசாபிமானமுள்ள நோக்கத்திற்கு யாதொரு பிரதி பலனுங் கிடைக்காமற் போயிற்றே யென்று அவன் மனந்தளர் வுற்றது. அவன் அடியெடுத்து வைக்கும் போதெல்லாம் அவமதிப்பையே எதிர் பார்ப்பான். அவன் வெயிலென்றும் மழையென்றும் பாராமல் வீடு வீடாகவும், கிராமங் கிராமமாகவும், பட்டணம் பட்டணமாகவும் அலைந்து திரிந்தான். அதனல் அவனுடைய தேக சுகங் கெட்டுப் போயிற்று. அவன், தன்னெண்ணம் முடிவுபெறு மென்ற நோக்கத்தோடே அவ்வாறு அலைந்து திரிந்தான். அன்றியும், படாணியர் ஆட்சியில் அடிமைப்பட்டிருக்குந் தலையினின்றுந் தாய்நாட்டை விடுவிப்பதற்குத் தெய்வச்செயல் உண்டாவது சமீப காலத்தில் இல்லையென்பதையும் ஒருவாறு உணர்ந்தான். ஆயினும், அவன் ஒவ்வோரிடமாக அலைந்து திரிவதை விடவில்லை. சில சமயம் ஒருவேளை உண்டு ஒருவேளை பட்டினி கிடப்பான். சில சமயம் ஒரு கவள ஆகாரமுங் கிடைக்காமல் முழுநாளும் பட்டினி கிடப்பான். அதனல், நாளுக்கு நாள் அவனுடைய அழகிய தேக மிளைத்து எலும்புக்கூடதா யிருந்தது. அவன் பிச்சைக்காரனுகிப் பார்ப்பவர்களுக்கும் பைத்தியக்காரனைப்போலக் காணப்பட்டான். ஜனங்கள், அவன்பால் அனுதாபப் படுவதற்குப் பதிலாக அவனை வைது துரத்தினர்கள். அவன் உடையும் துண்டு துண்டாகக் கிழிந்திருந்தது. ஆயினும், அவ னிடையில் வாளொன்றும், முதுகில் வில்லொன்றும் அம்பறுத்தூணியு மிருந்தன. அவன் அவ்வாறிருந்தால் பித்தாச்சிரமவாசி போலவேதோன்றினன். ஆதலால்,அவனைப் பைத்தியக்காரனென்றே எண்ணிச் சிறுவர்களும் அவன் மீது மண்ணைவாரிப் போடவும் அடிக்கவுந் தலைப்பட்டனர்.

இச் செய்கைகள் "சிறுவர்களுக்கு விளையாட்டு, தவளைக்குப் பிராண சங்கடம்" என்பது போல அநந்தனுக்குப் பொறுக்கக் கூடவில்லை. ஜனங்கள் தன்னைப் பித்தனுக்கித் துரத்துகிறர்களென்பதை யுணர்ந்தான். ஆதலால், அவன் மனம் வெறுத்து ஊரை விட்டு, மனிதசஞ்சாரமில்லாத காட்டை யடைந்தான். அவன் சஞ்சலத்திற்குள்ளாகித் திக்கற்றவ னுனன்: அவனுக்கு உயிர்க்குயிரா யிருந்த நண்பினரும் அவனை அறிந்துகொள்ளக் கூடவில்லை.

IX

ஒரு நாள் மாலைப்போது கங்கையாற்றின் கரையிலிருந்த நவக்கிராமம் என்ற விடத்தில் சந்தைக்கடைகள் அநேகம் வைக்கப் பட்டிருந்தன. அங்கே கூடியிருந்த ஜனங்களின் தொகை இரண்டாயிரத்திற்கு மேலிருக்கும். ஜனங்கள் பல பண்டங்களை விற்பதும் வாங்குவதுமா யிருந்தார்கள். அப்போது அங்கே ஒரு மூலையில்

திடீரென்று ஓர் பெருங் குழப்ப முண்டாயிற்று. ஜனங்கள் தங்கள் வேலைகளைவிட்டு விட்டு அங்கே ஓடினார்கள். ஓடின ஜனங்கள் என்ன பார்த்தார்கள்? ஒரு மனிதனைப் பெருங் கூட்டமான ஜனங்கள் சூழ்ந்துகொண் டிருந்தார்கள். ஆனால், அவ னருகிற் செல்லுவ தற்கு ஒருவருந் துணியவில்லை, அவன் தன் மானத்தைக் காக்கும் பொருட்டு மறைந்திருந்த கோவணம் அழுக்காயும் கிழிந்து மிருந்த தென்றால், அவன் உடையைப்பற்றி நாம் பேசவும் வேண்டுமோ? அவனுடம்பில் அழுக்குப்படிந்தும், தலைமயிர்க்கு எண்ணெய் தட விச் சீப்பு கொண்டு சீவாமலு மிருந்ததால், அவை ஒன்றோ டொன்று பின்னிச் சடைபற்றி இள முருங்கைக்காய் போலத் தொங்கின. அவன் இடையில் உறையிலிட்ட வாளொன்றும் முது கின்மேல் பெரிய வில்லும் அம்புகள் பொதிந்த அம்பறாத்தூணியு மிருந்தன. அவன் முகம், துக்கத்தாலும் ஏக்கத்தாலும் பட்டினி யாலும் வாடி வெளுத்திருந்தது. அவனிருந்த தோற்றம், உலகி லெங்கணும் அவனினுந் துர்ப்பாக்கியன் இரா னென்பதைக் காட்டு வதாயிற்று. அதனால், அவனை ஜனங்களெல்லோரும் பைத்தியக் காரனெனத் தீர்மானித்துப் பைத்தியக்காரனை நடத்துவதுபோல நடத்தினார்கள். எல்லோரும் ஓவென் றரற்றிக் கைகொட்டிச் சிரித்தனர். பலர் அவன்மீது மண்ணைவாரி யிறைத்தனர், மண்ணாங் கட்டிகளை வீசி எறிந்தனர், நங்கு காட்டினர். எல்லோரும் "ஓ வங்காள பாக்ஷாவே! ஓ வங்காள பாக்ஷாவே" என்று பரிகசித் தனர்.

சில துடுக்கான சிறுவர்கள் அவனை யணுகி "ஓ பாக்ஷா! ஓ பாக்ஷா! உமக்கு வந்தனம், வந்தனம்" என்று கூச்சலிட்டனர்.

அவ்வாறு பல ஜனங்களாலும் பைத்தியக்கார னென்று மதிக் கப்பட்ட மனிதன் அநந்தராயே தவிர வே றெவனு மல்ல. அவன் ஒரு நாயைப்போலக் கிராமங் கிராமமாகத் துரத்தப்பட்டான். அவனுக்கு உண்மையில் பைத்திய மில்லையாயினும், ஜனங்கள் அவனைப் பைத்தியக்கார னென்றே எண்ணி நடத்தினார்கள். சிறிதும் இரக்கமற்ற ஜனங்கள் செய்த அத்தகைய துன்பங்களையும் அவன் மனத்திற் கொள்ளாமல், இனி ஊருக்குள் போவதில்லை யென்று உறுதி செய்துகொண்டு காட்டில் சரண்புகுந்தான். அங்கே அவன் மூன்று நாள் பட்டினி கிடந்தான். அதனா லுண்டான பசியின் கொடுமையும் களைப்பின் மிகுதியும் அவனால் பொறுக்கக் கூட வில்லையாதலால், நவக்கிராம சந்தைக்குப் போனால் ஏதா கிலும் தின்பண்டங் கிடைக்குமென்னு மெண்ணத்தால் அவன் அங்குவர நேர்ந்தது. ஐயோ பாவம்! அவன் அங்குவந்தும் அவன் துன்பம் ஒழியவில்லை. முன்போலவே நிந்தித்தலும் பரிகசித்தலும் வைதலுமாகிய பாடங்களையே கேட்டான். அவன், தனக்கு உண்

மையில் பைத்தியம் பிடித்திருக்குமோ வென்று நினைத்தான். அவனை ஜனங்கள் நிந்தித்தாலும் துன்புறுத்தினாலும் அதனை அவன் மனம் பொறுத்து, அக்கூட்டத்தின் நடுவே தைரியமாக ஆணேறு போல நின்றான். அவன் தனது வலது கையால் வாளை எடுத்துப் பிடித்தான். அவ்வாறு பிடித்ததும், அவ்வாளும் வில்லுமே அத்துன்பங்களுக் கெல்லாம் காரணமாயிருந்த தென்று அவன் உணர்ந்தான். அவனுக்குக் கோபம் அதிகரித்தது, ஜனங்களின்மேல் வாளைவீச எண்ணினான்; ஆனால், தன் தாய்நாட்டினர் மீது வாளை உபயோகித்தல் கூடாதென்னும் யோசனை உண்டாயிற்று. "படானியர்மேல் உபயோகிக்க வேண்டியதற்கும், தாய் நாட்டின் சிறையை மீட்பதற்கும் வைத்திருக்கும் வாளாயுதத்தை வேறு காரியத்தில் உபயோகிக்க மாட்டேன்" என்று தன் கையிற் பிடித்திருந்த வாளை உறைக்குள் ளிட்டான். தான், கணப்போதில் உண்டாகிய மனக்கொதிப்பால், ஜனங்கள்மீது வாளை வீசுவதற்கு எண்ணியதற்காக மனஸ்தாபப்பட்டு "எனக்கு உண்மையில் பைத்தியமா" என்று மீண்டும் எண்ணினான்.

அவன் வாளை உறையினின்றும் எடுத்துப் பிடித்துப் பின் அதனை உறையிலிட்டதைப் பார்த்த ஜனங்கள் பயமுற்று ஓட்டமெடுத்தனர். ஆயினும், அவனைத் தனியே போகவிடாமல் பலர் அவனைச் சூழ்ந்துகொண்டு வைது "ஓ பாட்சாவே! பாட்சாவே!" என்று எளனஞ் செய்தார்கள். அவனுக்கு மிக்க மனோதிடமிருந்தமையால் அவன் தன்னை அடக்கிக்கொண்டு கங்கையாற்றை நோக்கிச் சென்றான். அவன் உடலெங்குஞ் ஜனங்கள் கல்லா லடித்த காயங்க ளிருந்தன. அவன் தன் நோயைப்பற்றி ஒரு பேச்சும் பேசாமல், தனக்கு நேர்ந்த துன்பங்களையெல்லாம் பொறுத்துக் கொண்டு, கங்காநதியை அணுகிப் பெருமூச்செறிந்து கங்கையைப் பார்த்துத் "தாயே இதோ நான் உன்பால் வருகின்றேன். இந்த நிர்ப்பாக்கியனை உன் அலைகளாகிய கைகளா லேந்தி உன் மடிமீதிருத்திக் கொள்வாய்" என்று வணங்கி, உடனே நதியிற் குதித்தான். அதனைக்கண்ட ஜனங்க ளனைவரும் அப்போதைக்கு ஆச்சரியமுற்று நின்றாராயினும், பிறகு அவன் அவ்வாறு செய்தது "பைத்தியத்தின் சேட்டையாகும்" எனக் கூறி அகன்றனர்.

கிராம புனருத்தாரணம்.

உலகத்தில் ஐந்தி லொரு பங்கு ஜனத் தொகையை யுடைய நமது இந்தியா தேசமானது விசேஷ கிராமங்களை யுடைய பெரிய தேசம். இத் தேசத்தின் சீர், கிராம சீர் திருத்தத்தைப் பொறுத் திருக்கின்றது. முற்காலத்தில் கிராமங்கள் அக்கால நிலைக்கேற்கப் பூரண சுதந்தரம் பெற்றுச் சுய ஆட்சி செய்து வந்தன. தங்களுக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் தங்கள் கிராமத்திலேயே அக்காலத்திய ஜனங்கள் உற்பத்தி செய்து எவர் கையையும் எதிர் பார்த்து நிற்காமல் சுகமாக வாழ்ந்து வந்தனர். அவர்கள், தங்க ளுக்குள் ஏற்படும் சச்சரவுகளைச் செலவின்றித் தீர்த்துக் கொள்ள கிராமச் சபைகளை யமைத்துக் கொண்டனர். தங்களுக்கு அத்தி யாவசியமாய் வேண்டிய தொழிலாளிகளை யெல்லாம் சாசுவத முறையில் தக்கபடி அமைத்துக் கொண்டனர். தங்களிடையே சுகாதாரம் நிலைத்திருக்கப் பல வைதீகச் சடங்குகளை ஏற்படுத்தி சுகத்துடன் வாழ்ந்தனர். இப்பொழுது அதிகச் செலவில் படா டோபமா யமைத்திருக்கும் நகர வைத்தியசாலைகளுக்குப் பதிலாக அக்காலத்திய கிராமவாசிகள் பச்சிலைகளையும் நல்ல வேர்களையுங் கொடுத்துக் கணப்பொழுதிலேயே சுகப்படுத்தக் கூடிய வைத்தியர் களை ஏற்படுத்தி யிருந்தனர். தொழில்கள் செய்து அலுப்புற்றிருக் குங் காலத்து, கூத்து முதலிய கேளிக்கைக ளேற்படுத்தி அவை களைக் கண்டு தங்கள் சோர்வை நீக்கிக்கொண்டு வந்தனர். கிராம பாதுகாப்புக்காக மல்லக ஜட்டிகளைப் போஷித்து வந்தனர். பொதுவாக எல்லோரும் நல்ல பலம் பெறச் சிலம்பக் கூடங்களை அமைத்துக் கொண்டனர். கிராமத்தின் பொது நலச் செலவிற் காக அக்காலத்தவர் கிராமப் பொது நிதி யொன்றையும் ஏற்படுத் திக் கொண்டிருந்தனர். இந்த நிதிக்குப் பலவித வருவாய்கள் வைத்து இதை நிரப்பி, இதிலிருந்து கோயில், குளம், நந்தவனம், பாரத ராமாயணப் பிரசங்கங்கள், சுமைதாங்கி, அந்திப் பொழு தில் உல்லாசமாய் உட்கார்ந்து பேச மரத்தோடு கூடிய மேடை கள், பள்ளிக்கூடங்கள், சாதுக்கள் தத்துவ விசாரணை செய்யும் மடங்கள் முதலியவைகளைச் செய்தும் பரிபாலித்தும் வந்தனர்.

இவற்றை நோக்கும்போது இப்பொழுதுள்ள கிராமத்தின் நிலை மிக்க பரிதாபமா யிருக்கிறது. ஒவ்வொரு கிராமத்திற்கும் வரிப் பணம் ஆயிரக் கணக்கி லிருக்கிறது. அதன் வரி வசூலுக் கேற்க அக்கிராமத்திற்கு அத்தியாவசியமாய் வேண்டியவைகள் அமைந்திருக்க வில்லை. சிறு விவகாரத்திற்கும் அதிகப் பணம் செலவாகிறது. கோவில்கள் பாழடைந்து கிடக்கின்றன. மக்க

ளுக்கு அறிவுறுத்தும் சாதுக்கள் மட மில்லை. உல்லாசமாய் உட்கார மேடை இல்லை. நந்தவன மில்லை. பணச் செலவு அதிகமின்றி செய்து கொடுக்கும் தொழிலாளிகள் இல்லை. நன்னீருந்தக் குள மில்லை. பாரத ராமாயணப் பிரசங்கங்க ளில்லை. சுமைதாங்கி இல்லை. பலம் வளர்க்கச் சிலம்பக் கூடங்க ளில்லை. இகபர சாதனங்களுக் குதவும் தேசீயக் கலாசாலைக ளில்லை. எங்கும் இருள் சூழ்ந்து கொள்ளை நோய் வாய்ப்பட்டுக் கிராமங்கள் வறுமையி லாழ்ந்து கிடக்கின்றன. இவைகளைப் புனருத்தாரணஞ் செய்ய ஒவ்வொரு தேச பக்தரும் கிளம்ப வேண்டும். தேச பக்தரெனப் படுவோர் பலர் நகர்ப்புறப் பிரசங்கங்களே கிராம புனருத்தாரண மெனக் கருதுகின்றனர். அவர்க ளெல்லோரும் கிராமங்களுக்குத் திரும்பி கிராமங்கள் பண்டைய நிலையை அடைய பிரசாரஞ் செய்ய வேண்டும்.

இப் பிரசார மொன்றினால்தான் நமது கிராமங்கள் பண்டைய நிலைமையை அடைய வேண்டும். கிராமங்கள் தம் பூர்வீக நிலைமையை உணரத் துண்டுப் பிரசுரங்கள் மூலம் வெளியிடத் தேசாபிமானிகள் முற்பட வேண்டும். கிராமங்கள் தோறும் சங்கங்கள் கண்டு அவைகளின் வேலைகளை வரையறுக்க வேண்டும். கிராமத்தார் பொருளாதார விருத்தி யடைய விவசாய ஞானத்தையும், கைத்தொழில் ஞானத்தையும் போதிக்க வகை தேடவேண்டும். கிராமச் சிறுவர்களுக்கு, நாய், பூனை பாடங்கள் கற்பிப்பதை விட்டு இகபர சாதனங்களுக்கு உபயோகமான தேசீயக் கல்வியைப் போதிக்க கலாசாலைகளை நிறுவ வேண்டும். போக்கு வரவு சாதனங்களைச் செம்மைப் படுத்த வேண்டும். கால்நடைகளின் வளர்ச்சிக் கேற்ற வழிதேட வேண்டும். மூலிகாதி ஔஷதங்கள் உபயோகிக்க மார்க்கம் கண்டுபிடிக்க வேண்டும். கிராம புனருத்தாரண வேலைகளை யெல்லாஞ் செய்ய முற்படவேண்டும். அறிவுள்ள தேச பக்தர்கள் யாவரும் இனி கிராம புனருத்தாரணஞ் செய்ய கிராமங்கள்தோறும் புற்றீசல் போலப் புல புலெனக் கல கலெனப் புறப்படுவார்க ளாக.

மே. சக்கரவர்த்தி.

நீண்டாயுள்.

சென்னைப்பட்டணத்தில் ஹைகோர்ட் வக்கீலாக இருந்து வருகிற வரும், உயர்தரக் கலை வல்லுனரும், விஞ்ஞான ஆராய்ச்சி யில் சிறந்து விளங்குபவருமான எமது ஆப்த நண்ப ரொருவர் சில மாதங்களுக்கு முன் எமக் கெழுதிய கடிதத்தில், "நீண்டாயுளு" டன் "வெகுகாலம்" ஜீவித்திருப்பதற்கு ஒரு புதிய "விஞ்ஞான வழி" கண்டு பிடிக்கப்பட வேண்டு மென்றும், அவ்வழியை அப்பிய சித்து நீண்டாயுளுடன் அவசியம் நாம் வாழ்ந்திருக்க வேண்டும் எனவும், எமக்குத் தெரிந்த வழியைத் தெரியப்படுத்தும்படியும் எழுதி யிருந்தார்.

அவருக்கு நா மெழுதிய முதற் கடிதத்தில் "ஜீவசக்தி"யின் குறைவே அற்பாயுளுக்குக் காரணமாக விருப்பதால் அச்சக்தியை நமது தேசத்தில் ஏராளமாகப் பெருக்கிக் கொள்வதால் நீண்டா யுளைத் திட்டமாக அடையலாம் என்று வற்புறுத்தினோம்.

இவ்விஷயமாகத் தற்போது சில மாதங்களாக அவருக்கும் எமக்கும் ருசிகரமான பல தர்க்கங்கள் நேரிட, அத்தர்க்கங்களின் பலனாக நாம் ஒரு "புதிய உண்மையை"க் கண்டுபிடித்து அப்புதிய உண்மையை மேற் கூறப்பட்ட ஜீவ சக்தி அபிவிருத்தியுடன் பழக் கத்திற்குக் கொண்டுவர வேண்டு மென்றும், அவ்விதம் கொண்டு வருவதனால் நீண்டாயுளை யடையலாம் என்றும் சித்தாந்தப்படுத்தி வருகிறோம்.

இந்தப் "பெரும் ரகசிய"த்தை விளக்குவதான விவகாரம் நமது லக்ஷ்மியைப் படித்து வருபவர்களுக்கும் மற்றவர்களுக்கும் மிகுந்த உபகார முள்ளதாயும், அவசியமானதாயு மிருக்குமென்று கருதி, நீண்டாயுளுக்காக நாம் "கண்டு பிடித்துள்ள" ரகசியங் களையும், விவகாரத்தின் சாரத்தையும், சில வியாசங்களால் வெளி யிடக் கருதி யுள்ளோம். ஆகவே முதல் வியாசத்தைக் கீழே கொடுக் கிறோம்.

"ஜீவ சக்தி"

நமது தேகத்தில் தேவையான பிராணன் அல்லது ஜீவ சக்தி யில்லாமையே நோய், முது வயது, மரணம் ஆகிய இவைகள் உண்டாவதற்குக் காரண மாகையால், ஜீவ சக்தியை ஒவ்வொரு வரும் அப்பியசித்துப் பெருக்கிக்கொள்ள வேண்டும். இங்ஙனம் செய்தால் உடல், உயிர், முதலிய இந்த "நாம்" என்ற உரு வத்தை நீண்டாயு ளுள்ளதாக்கிக் கொள்ளலாம்.

நீண்டாயுள்

நம் முன்னோர்கள் "ஜீவ சக்தி வித்தையை" நன்கறிந்தவர் களாகவும், பயிற்சி பெற்றவர்களாகவும் இருந்து, கேவலம் நீண் டாயுள் மட்டுமல்ல அதற்கு மேற்பட்ட பதவிகளையும் அடைந்திருந் தார்கள்.

அவர்களின் சந்ததியாராகிய நாம் ஏன் அந்த ஜீவசக்தி வித்தை யைக் கற்றும், படித்தும் பெருக்கிக்கொள்ளக் கூடாது?

மேல் நாட்டார் ஜீவ சக்தி அல்லது "உயிர் வித்தை" ஒன் றொழிய மற்றச் சகல விஞ்ஞானங்களிலும் பெரும் பயிற்சியும், அனுபவமும் உள்ளவர்களாக யிருந்து வருவதை நாம் பார்க்கிறோம். அந்த விஞ்ஞான அறிவுகளால் அவர்கள் அடைந்துவரும் மகோன் னத பதவியையும் நாம் பார்க்கிறோம். எனினும் அவர்கள் ஜீவ சக்தி வித்தையில் நம்மவர்க்கு வெகுதூரம் பிற்பட்டவர்களே யாவார்கள்.

சென்ற சில ஆண்டுகளாக அன்னோரும் நம் நாட்டு ஜீவ வித்தையின் உண்மைகளை யறிந்து, ஆராயத் தொடங்கி யிருக்கிறார் கள் என்றறிய மிக மகிழ்கிறோம்.

ஆகவே இந்த ஜீவ வித்தையை மேல் நாட்டாராயினும், கீழ் நாட்டாராயினும், மற்ற எந்த நாட்டாராயினும், பொதுவாக ஜன சமூகம் முழுவதும் பயின்று வரல் அவசியம் என்று மறுபடியும் வற் புறுத்துகிறோம்.

இந்த "ஜீவ வித்தை" என்பது எது? என்று அறியப் படிப்போர் ஆவல்கொள்ளலாம்; அது வேறொன்று மல்ல, ஜீவன் அல்லது பிராணனைச் சுத்த முள்ளதாகவும், நிரம்பவும் நமது தேகத் தில் சேர்த்து வைத்துக் கொள்வதாகவுமுள்ள வித்தையே யாம்.

இப்படிச் செய்வதற்கு அதிகப் பிரயாசை யொன்று மில்லை. கடல்போல நாம் வசிக்கும் இவ்வுலகத்தில், நம்மைச் சுற்றியும் எந்த இடத்திலும் நிரம்பி யிருக்கும் ஜீவனை வாயுவின் வழியாக உள்ளிழுத்து, அப்பியசித்து ஜீவ சம்பாத்தியம் செய்து வருவதே யாகும்.

இதையே நமது யோகிகள் "பிராணாயாமம்" என்று கூறு கிறார்கள். புதிய விஞ்ஞான அப்பியாசியாகிய நாம் அதை "ஜீவ வித்தை" என்று அழைக்கின்றோம்.

இவ்வித்தையை யறியாத "எக் கல்விமானும்" பயன் படும் மனித வாழ்வின் பலன்களைப் பூர்த்தியாக அடையமாட்டான். அற்பாயுள், நோய், அறிவீனம், மரணம் ஆகிய துன்பங்களால் பயப் படுத்தப்பட்டு, நிலையற்ற வாழ்வைக் கைக்கொண்டவனாகத் தவிப் பான்.

இந்த நிலையில்தான் தற்போது உலகத்து நாகரீக, அநாகரீக ஜன சமூகம் முழுவதும் வசித்து வருகின்றன. இந்த "நிச்சய மற்ற" வாழ்வில் உலகத்தில் வசிப்பதை நீக்கி "நிச்சயமுள்ள வாழ்வை" அடையத்தான் மனித சமூகம் விரும்புகிறது. அவ் விருப்பம் வேறு எந்த வழியிலும் சாத்தியமல்ல. ஜீவ வித்தைப் பயிற்சியால்தான் சாத்தியம் என்று படிப்போர் அறியவேண்டும் இப் பயிற்சி ஆரம்பிக்கப் படின் ஜீவன் அல்லது பிராணன் மனித தேகத்தில் மூன்று முக்கிய மாற்றங்களை அல்லது நிலைகளை உண் டாக்குகின்றன.

முதலில் பயிற்சி பெருகப் பெருக தேகத்தின் அழுக்குகள் எரிக்கப்பட்டுச் சாம்பலாக்கப் படுகின்றன. இரண்டாவதாக தேகத் தில் அஜ் ஜீவன் ஏராளமாகத் தங்கிப் பழைய கட்டிடத்தைப் புதுப் பித்துப் பலப்படுத்தித் தான் சந்தோஷமாகத் தங்குவதற்குத் தகுதி யுள்ள தாகவும், "நிச்சய வாழ்க்கை" யுள்ளதாகவும் செய்து கொள்ளுகிறது. மூன்றாவதாகப் புத்தி, சித்தம், மனம் முதலிய வற்றைச் சுத்தமுள்ள தாகவும், ஆழ்ந்து யோசிக்கத் தகுதி யுள்ள தாகவும், வைராக்கியம், மன உறுதி, தீர்க்கம், முதலிய குணங்களைத் தக்கவாறுள்ள தாகவும், செய்து கொள்ளுகிறது.

ஆக இந்த முக்கிய முத்தொழிலும் பெற்றபின், பொதுவாகத் தேகத்தின் உள்ளும் வெளியிலும் ஜீவ சக்திக்குத் தடையான எதா வது "வெகு காலத்துக் கெட்ட வழக்கங்களா"வது, பயிற்சியாவது, இருந்து அதனுல் பெருங் கேடுகள் விளைந்து வருவதாலுல் அந்தத் தீய வழக்கங்களை அடியோடு எடுத்தெறிந்து விடுகிறது.

இந்த நிலை அடைந்ததின் மேல் நமது தேகம் அல்லது, நாம் அல்லது மானிட சமூகம் நீண்டாயுளுக்குத் தகுதியுள்ள தாகிறது. இதன்மேல் நீண்டாயுள் (இந்நிலைகள் தொடர்ந்து வந்துகொண்டே யிருந்தால்) சாத்தியமாகி விடுகிறது.

எமது நண்பர் விரும்பிய நீண்டாயுள் இங்கிருந்தே ஆரம்பிக்கி றது. இந் நீண்டாயுளுக்குத் தடையாயுள்ள கேடுகள் (இந்நிலை நிஜமாயின்) பல இல்லாவிடினும் சில இருக்கின்றன. அவைகளில் முதன்மை யானவை "நித்திரையும் சாந்தியும்" ஆகிய இவ்விரு தடைகளே யாரும். ஆகையால் முதலாவதான நித்திரையைப்பற்றி இங்கு ஆராய்வோம்.

"நித்திரை"

"நித்திரை" மனிதனது கெட்ட பழக்கங்களில் ஒன்ருகும். அது! மனிதனது சுபாவ மன்று. வேலைக்குப் பின் ஓய்வு அவசியமே யன்றி நித்திரை அவசிய மன்று. உயிர் எப்பொழுதும் நித்திரையை

எதிர்க்கிற சுபாவத்தை யுடையது. ஏனெனில் உயிர் விழிப்பி லிருக்கும்போது நித்திரை வருவதில்லை. நித்திரை மிகவும் ஓங்கி வரும்போது உயிர் பலமுள்ளதாக விருக்குமானல் நித்திரையை வென்று விடுவதும், உயிர் பலமற்றதாக விருக்குமானல் நித்திரை உயிரை வென்று விடுவதுமாக இருக்கிறது. தேகத்தின் இரத்த வோட்டம், ஜீரண வேலை இவைகள் நித்திரையால் பலக் குறைவா யும், நிதான நிலைக்கு மிகத் தாழ்ந்தும், இருக்கிறபடியால் உயிர் நிலையில் நித்திரை விரோதமுள்ள தாகிறது. தேகம் உயிரையும், உயிர் தேகத்தையும், ஆதரவாகக் கொண்டிருப்பதை நாம் பார்க்கி ரேம். ஒன்றில்லாதபோது மற்ருென்று அழிகின்றது. நித்திரை இல்லையேல் உயிர் அழிவதில்லை. தேகம் அழிவதில்லை. இந்த நிலைக்கு மாருக நித்திரை தடுக்கப்பட்டோ நிறுத்தப்பட்டோ விடு மானல் உடல் உயிர் இவைகளின் நிலை சுகத்தையும் சுறு சுறுப்பை யும் அடைவதை நாம் பார்க்கிரேம். ஆகவே நித்திரை உயிர் நிலைக்கு அவசிய முள்ளதாக மாட்டாது.

படுக்கை, தலையணை, ஒய்ந்த இடம், சமயம் முதலியவைகளைக் கண்ட பிறகே நித்திரை பெரும்பாலும் ஆரம்பமாகிறது. நித்திரை யைப் பற்றி நினைப்பதும் ஒரு பெரிய காரணமாகும். "நினைக்காத போது நித்திரை வருவதில்லை." வெகு காலத்துக் கெட்ட வழக் கமே இந்த நினைப்புக்கு ஆதரவாகும். இந்தப் பழக்கத்தை மெது வாக நீக்கி விட்டால் நாம் நித்திரையை மறந்து விடலாம்; மறந் தால் அது வரமாட்டாது.

நித்திரையை நிறுத்துவதால் நல்ல பசியும், தாகமும், சுறு சுறுப்பும் உண்டாகின்றன. ஒரே வேளை ஆகாரத்தோடு இரவுப் பொழுதைப் போக்க முடியாது. இரண்டு அல்லது மூன்று வேளை ஆகாரம் இரவில் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதிக மான ஆகாரம் உட்கொள்ளலாம். அதுபோலவே அதிகப் பசியும் விருத்தி யடைகிறது. அன்றியும் நாட்பட்டதும், எந்த வைத்தியத் தாலும் தீராததுமான கடின ரோகங்கள் எல்லாம் நித்திரை செய் யாது விழித்துக்கொண் டிருப்பதால் சுகப்பட்டு விடும் அற்புத ரகசியத்தை நாம் பார்க்கலாம்.

தற்காலத்தில் வைத்தியர்கள் இந்த உண்மைக்கு மாருக நல்ல நித்திரை இல்லையானல் அதைக் கேடான குறிகளாகக் கொள்கி ருர்கள். இது விஞ்ஞான விரோதமும் பொய்யானதுமான அபிப் பிராய மாகும். நோயாளி நல்ல தூக்கம் வராமல் கஷ்டப்பட்டுக் கொண்டே யிருப்பானுனல் அவன் சாகவே மாட்டான். அவன் நோயும் சில தினங்களில் சுகமடைந்து விடுகிறது. நோய் கொண்ட போது நோயாளி நன்ருகத் தூங்குவானுனல் அவன் நோய் நீடித் துப் பெருகும். அல்லது அவன் வெகு சீக்கிரம் இறந்துபோய்

விடுவா னென்பது நிச்சயம். இந்த உண்மையைச் சென்ற இருப தாண்டுகளாகப் பல நண்பர்களுக்கும் நாம் மெய்ப்பித்திருக்கிறோம்.

நித்திரை போகாது அழுதுகொண்டும் அதிக துஷ்டத்தனம் செய்து கொண்டும் இருக்கும் குழந்தைகளைத் தாய்மார்கள் வெறுத்துக் கோபித்தும், கேடெனக் கருதியும், அக் குழந்தைகள் நன்கு தூங்கும்படி மருந்துகளையோ அபினீ போன்ற விஷ பதார்த்தங்களையோ, கொடுத்தும் பழக்குகிறார்கள். இதுவே இந்தக் கேடான நித்திரை மனித வாழ்வைப் பற்றிக் கொள்வதற்கு முதற் காரணமாகும். இம் மருந்துகள் தயாரில் இல்லாதபோது குழந்தைகள் தூங்குவதற்காகத் தாய்மார்கள் செய்யும் இந்திர ஜால வித்தைகள் பலவாகும். துணி அல்லது படுக்கையை விரிப்பதும், குழந்தையைப் பலவந்தமாக அதில் குப்புறப் படுக்கப்போட்டு முதுகில் மெதுவாகத் தட்டிக் கெடுத்துப் பாட்டுப் பாடுவதும், பொய்யான கதைகளைச் சொல்லிப் பயத்தை யுண்டாக்குவதும், நித்திரை வந்ததா? வந்ததா? வென்று பல தரம் கேட்பதும், "நாசமாகப் போகும் குழந்தை தூங்க மாட்டேன் என்கிறதே என்ன செய்வேன்" என்று தன்னைத் தானே நொந்து பலபேரிடம் சொல்வதும், பக்கத்துப் பெண்களிடம் என் குழந்தை தூங்க ஒரு மருந்து சொல்லாயா யென்று கேட்பதும், தொட்டில், தூங்கு மஞ்சம், தலையணைகள், மெத்தைகள், முதலியவைகளில் குழந்தைகளை அடிக்கடி வெகுநேரம் படுக்கப் போட்டு வைப்பதுமாகிய எத்தனையோ அக்கிரமமான வழக்கங்களைக் கையாண்டு நித்திரையை நாம் உண்டாக்குகிறோம்.

இந்தக் கேடான வழக்கங்களாலேயே நித்திரைப் பேய் மனித வாழ்வைத் துக்கமும், துன்பமும் உள்ளதாகவும், நோயும் பலஹீனமும் உள்ளதாகவும், செய்து விட்டது. அன்றியும் மனித ஆயுளில் பாதியைத் தனக்குப் பலியாக்கியும் கொண்டது என்பதில் யாதொரு ஐயமு மில்லை.

மனிதனுக்கு உணர்ச்சியற்ற பிறகே நல்ல நித்திரை தொடங்குகிறது. நல்ல நித்திரையி லிருந்து உணர்ச்சி யுண்டாவதற்கு முன் எழவே முடியாது. இவ்வுணர்ச்சி நித்திரையில் வல்லமைக்குட் படுத்தப்படும் வழக்கத்தைத் தடுப்பதற்குச் சிறந்த வழி வேறொன்று மில்லை. நித்திரையை நீக்குவதே யாகும்.

நித்திரையில் உண்டாகும் பல பெருங் கேடுகளில் முதன்மையானவை இரண்டாகும். அவை "விருத்தாப்பியமும்," "மரணமும்" என்க. நித்திரை வரும்போது அந் நித்திரை தவிர மற்றச் சகல பதார்த்தங்களின் மேலு முள்ள விருப்பங்களும் மறுத்துவிடப் படுகின்றன. அந் நித்திரை விருப்பமே பலப்பட்டு நிற்கிறது;

விருத்தாப்பியம் அதிக நித்திரையால் வெகு சீக்கிரம் உண்டாய் விடுவதை நாம் பார்க்கிறோம். அதுபோலவே கொஞ்சம் அல்லது அற்ப நித்திரையால் விருத்தாப்பியம் சிறிது மெதுவாக அல்லது தாமதமாக வருவதையும், நாம் அறிந்திருக்கிறோம். பொதுவாக விருத்தாப்பியர்கள் இரவுகளில் வெகு நேரம் தூங்குவதில்லை. மிகவும் சிறிது காலமே தூங்குகிறார்கள். அத்தூக்கமும் ஆழ்ந்த தூக்க மல்ல. கோழித்தூக்கமே யாகும். ஒரு விருத்தாப்பியனும், ஒரு நடுத்தர வயதுடையவனும் தூங்கும் இடத்தில் நாம் சென்று அழைப்போமானால் விருத்தாப்பியனே முதலில் எழுவதை நாம் பார்க்கிறோம். அல்லது பார்ப்போம். ஏனென்றால் நடுத்தர வய துள்ளவன் வெகு சீக்கிரம் விருத்தாப்பியனா வதற்காக ஆழ்ந்த தூக்கம் தூங்குகிறான். விருத்தாப்பியன் தன் கிழத்தனத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகச் சிறிதளவே தூங்குகிறான் ; அச்சிறு அளவுத் தூக்கத்தாலேயே அவன் விருத்தாப்பியனாக விருக்கிறான் என்பதை அறியவேண்டியது. அக்கிழவன், வேகமாகத் தூங்கத் தொடங்கி விட்டானானால் அதுவே அவனது மரணத்திற்கு ஆரம் பம் என்றறிய வேண்டியது. சில தினங்களில் அவன் சாவான் என்பதில் சந்தேகம் வேண்டுவதில்லை.

தூக்கத்திற்குப் பின் தொடர்ந்து சூரிய ஒளி யிருந்தாலன்றித் தூக்கம் விழித்தவனுக்குப் பசியும் தாகமும் உண்டாவதில்லை. மறு படியும் தூக்கம் வருவதை நாம் பார்க்கிறோம். நாள் ஒன்றுக்கு நான்கு மணி நேரம் தூங்கிப் பழகியவன் அந்நான்கு மணியோடு திருப்தி யடைவதையும், எட்டு மணி நேரம் தூங்கிப் பழகியவன் எட்டு மணித் தூக்கத்தோடு திருப்தியடைவதையும், நாம் பார்க் கிறோம். ஆகவே தூக்கம் மனிதனது வழக்கத்தைமட்டும் ஆதார மாகக் கொண்டதே யன்றி அவசியத்தை ஆதரவாகக் கொண்ட தல்ல.

தூக்கத்திற்கு முன்னர் இருந்த தேக நிலைக்கும், தூக்கத்திற் குப் பின்னருள்ள தேக நிலைக்கும், உள்ள பெரிய வித்தியாசத்தை நாம் கவனிக்க வேண்டும். தூக்கத்திற்குப் பின் உயிரின் நிலையும், இரத்த வோட்டத்தின் கதியும், தேகத்தின் சரும நிலையும் கேட டைந்து, பசி குன்றிக் கை கால்கள் ஓய்ந்து தளர்ந்திருத்தலை நாம் பார்க்கிறோம். இக்கேடுகள் போஜனம் ஜீரணமாகி முடிந்த தால் உண்டானதாகக் கருதப்படுகிறது. இது தப்பான அபிப் பிராயமாகும். நித்திரைக் காலத்தில் தேகத்தின் அனல் சிறிது சிறிதாகக் குறைந்து, இரத்த வோட்டம் மட்டுப்பட்டு தேகக்கருவி கள் உயிர்த்துணைக்குத் தவித்து, ஓய்ந்ததனால் இந்நிலை ஏற்பட்ட தாகும். விழிப்பின் பின் சிறிது சிறிதாக இந்நிலை மாறுவதால் புத்துயிரின் சக்தி பெருகி நிதான நிலைக்கு வருதல் வேண்டும்.

மனிதர்களை யேனும், மிருகங்களை யேனும் விஷப்பாம்பு கடித்து விட்டாலும், பெருங் காயங்கள் உண்டாகி விட்டாலும் இரவு முழுவதும், பகல் முழுவதும் தூங்காமலிருந்தாலொழியப் பிழைப்பது கஷ்டம் என்று முற்கால, தற்கால வைத்தியர்கள் கண்டிப்பாகக் கூறியிருப்பதையும், கூறிவருவதையும் நாம் அறிவோம். வியாதியால் வருந்தி சுகப்பட்டவர்கள், ஸ்நானம் செய்தால் அன்று பகலில் தூங்குவது கூடாதென்று கட்டாயப் படுத்தப்படுகிறார்கள். உடல் பனியினால் வருந்தியபோது, அப்பனியின் குளிர்ச்சி நிவர்த்தியாகும்வரை தேகத்தை நெருப்பிலோ, வெயிலாலோ வாட்டிக்கொண்டு உஷ்ணம் உண்டான பிறகே தூங்க வேண்டும் என்றும், இன்றேல் மரணம் திட்டமாக உண்டாகு மென்றும் வைத்தியர்களும் அனுபோகஸ்தர்களும் கண்டிப்பாகக் கூறுகிறார்கள். நெப்போலியன் ருஷிய நாட்டிற்குப் போர்ப்படையனுப்ப, அப்படை ருஷியத் தலை நகராகிய செயின்ட் பீடர்ஸ் பர்க்கின் பக்கத்தில், பனியால் களைத்துப் படுத்ததால் முப்பதினாயிரம் படைவீரரும் மடிந்ததாகச் சரித்திரம் கூறுகிறது. அப்படை வீரர் தூங்கா திருந்திருந்தால் மடிந்திருக்க மாட்டார்கள். நம் நாட்டுப் பல விரதங்களில் பகல் தூக்கமும், இரவுத் தூக்கமும் கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கிறது. சிவராத்திரி தினத்தில் பகலும் இரவும் கண்டிப்பாகத் தூங்கக் கூடா தென்றும், தூங்கினால் பலன் கிடைக்க மாட்டா தென்றும், சொல்லப்படுகிறது. அன்றியும் மனு தரும சாஸ்திரத்தில் பொதுவாகவே "பகல் தூக்கம்" செய்தல் கூடா தென்றும், அவ்விதம் தூங்கினால் மிகுந்த பாவம் உண்டென்றும், பகலில் தூங்கினவன் எழுந்தவுடன் படுக்கையை எடுத்தெறிந்து விட்டு, உடனே ஸ்நானம் செய்து-ஒரு "கிஸ்ஸரம்" தங்கம் பிராமணனுக்குத் தானம் செய்ய வேண்டு மென்றும், இரவு படுத்த படுக்கையைப் பகலிற் பார்க்கவும் கூடாதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இங்ஙனம் உயிரை வளர்க்கவும், பலத்தைப் பெருக்கவும், அறிவை விருத்தி செய்யவும் எண்ணங்கொண்டே அதற்குத் தடையும் பகையுமான நித்திரையைக் கட்டாயப் படுத்தித் தடுத்திருக்கிறார்கள்.

மேலே கண்ட விஷயங்கள் மத விதிகளின்படியும், வைத்திய முறைப்படியும், விஞ்ஞான ரீதியாகவும் ஆட்சேபிக்க முடியாத உண்மைகளாக விருப்பதால் யாவரும் இச்சிக்கிறதான நீண்டாயுள், நோயின்மை, பலம், ஆனந்தம், இவைகளின் பொருட்டு ஏன் நாம் நித்திரையை இரவும் பகலும் நீக்கிவிடக் கூடாது? இக்கேள்விக்கு விடை 'ஆம். அவசியம் நீக்க வேண்டியதே' என்பதாகுமே யன்றி வேறின்று என்பதை நாம் கூறவேண்டுவதில்லை.

நீண்டாயுள்

மிருகங்களும், பட்சிகளும், புழுக்கள் முதலியனவும், தூங்குவ தாகச் சொல்லும் சித்தாந்தம் முழுவதும் பொய் என்று நாம் இங்கு வெளிப்படுத்துவது அவசியமாகும். நமது சித்தாந்தப்படியும், பரீக்ஷைகளின்படியும் மிருகம், பட்சி முதலியவைகள் தூங்குவதே யில்லை. ஆனால் இரவாயிருப்பதாலும், வெளியிற் பறக்க சாத்திய மற்றிருப்பதாலும், பகல் முழுவதும் வெளியில் அலைந்து வேலை செய்திருப்பதாலும் இந்த ஜீவராசிகள் ஓய்வெடுத்துக் கொள்கின் றன. இதுவே உண்மை.

நித்திரை அல்லது தூக்கம் என்பதற்கும், "ஓய்வு" என்ப தற்கும் மிகுந்த வித்தியாசம் இருப்பதைப் படிக்கும் விவேகிகள் யோசிக்கவேண்டும். பிரக்ஞையற்று ஐம்பொறிகளும் அடங்கிச செயல்கள் பெரும்பாலும் ஒடுங்கி, வினைகளற்று அறிவற்று, ஸ்பரிச ரூபங்களின்றித் தூங்குவதற்கும் கேவலம் ஓய்வெடுத்துக் கொள்வ தற்கும் மிகுந்த தூரம் இருக்கிறது. மிருக பட்சிப் புழுக்கூட்டங் களை ஒரு முறை சப்தத்துடன் கூவினாலும், அவைகளின் உடலை எதனாலேனும் தொட்டாலும் அந்த நிமிஷமே அறிந்துகொண்டு, தான் மனிதனைப்போல் நித்திரை என்ற அவஸ்தையில் இல்லை யென்று ஜாக்கிரதை யல்லது விழிப்பு என்ற உயிரின் உருவத்துட னிருப்பதாகவும், நமக்குத் தெரிவிப்பதுபோல் காட்டிவிடுகின்றன. ஆகவே அவைகள் தூங்கவேயில்லை யென்பதை நாம் நன்றாக அறி கிறோம்.

மனித ஜாதி ஒன்றே நித்திரையால் தங்கள் வாழ்நாட் களில் பாதியைப் பலிகொடுத்து நோய்களும், பலஹீனமும், அறி வின்மையையும், அற்பாயுளையும், பெற்று அழிந்துகொண்டு வரு கிறது. இது மிக அறிவீனமும் துக்கிக்கத் தக்கதுமாகும்.

மானிட சிருஷ்டியின் சுபாவப்படி மனித ஜாதி முழுவதும் இரவும் பகலும் தூங்குவதில்லையானால், ஓய் வெடுத்துக்கொண்ட காலம் போக மற்றக்காலங்களில் ஜாக்கிரதையில் வசித்து, இரத்த ஓட்டத்தையும், ஜீரணத்தையும், அறிவையும் அபாரமாகப் பெருக்கி வியாதிகளே யின்றி, நீண்டாயுள் பெற்று வாழ்வதில் தடை யொன்று மில்லை. தற்போதுள்ள அநேகம் ஸ்தாபனங்களும், ஔஷ தங்களும், டாக்டர்களும். பகலைப்போல் இரவிலும் மனிதன் ஆடிப்பாடி, உண்டு உடுத்து, அனுபவித்துக் களித்துச் சுகப்படுவ துடன், வெளிவேலை முழுவதும் சாத்தியமற்ற இராக்காலங்களி லும் வீடுகளில் படித்தும், வேலைகள் செய்தும், புஸ்தகங்கள் எழுதியும், இன்னமும் பல கைத்தொழில்களைச் செய்தும், அவைகளைப் பகற்பொழுதில் பண்டமாற்றியும், விற்றும், செல்வம் முதலிய சகல பாக்கியங்களையும் ஏராளமாக அடையலாம்.

இவ்வித ஆனந்தவாழ்வை இவ்வுலகத்தில் இதற்கு முன்னிருந்த ஜனங்கள் அடைந்திருந்ததில்லை யென்றும் தூங்கியே வாழ் நாட்களைக் குறைத்து, நோய்வாய்ப்பட்டு மடிந்து வந்தார்களென்றும் ஒருவராலும் சொல்லமுடியாது.

நமது முன்னோர்கள் நமது சித்தாந்தப்படியே, இரவும் பகலும் தூக்கமற்று விருப்புடனே, சுகதேகிகளாகவும், சிரஞ்சிவிகளாகவும் வாழ்ந்து வந்தார்களென்றும், அறிவீனத்தாலும், சோம்பலாலும், கெட்ட வழக்கங்களை வரவர ஏராளமாக நாளடைவில் அடைந்து கெட்டுவிட்டார்களென்றும், தெளிவுபடுத்திக் காட்டத் தகுந்த ஆதாரங்கள் எம்மிடம் ஏராளமாக விருக்கின்றன. அவ்வாதாரங்களை முழுவதும் எடுத்துக்காட்ட இச்சிறு வியாசம் இடந்தராதாகையால் சமயம் வந்துழி எடுத்துக்கூறத் தயாராக விருக்கிறோம்.

ஆகவே தூக்கமாகிய சத்துருவை மனித ஜாதி தனது வழக்கத்திலிருந்து நீக்கி எப்பொழுதும் விழிப்புடனேயே இருக்கப் பழகி வரவேண்டும் என்றும், அவைகளின் பலன்களை ஆனந்தத்துடன் அடைந்து அநுபவிப்பதுடன் "நீண்டாயுளின் பஞ்சத்தை" நீக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

"துஞ்சினார் செத்தாரில் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள் ளுண்பவர்" (குறள்)

"சாந்தி"

"சாந்தி" யென்பது ஓய்தலேயன்றித் தூக்கம் அன்று. இங்கு நாம் எடுத்தாளும் இப்பொருளன்றி வேறு பொருள் தமிழ்மொழி கூறுமாயின் அம்மொழியை நாம் சபிப்போமாக. வேலை செய்து தவித்த உயிரானது மறுபடியும் தன்னை நிரப்பிக்கொள்வதற்காக எடுத்துக்கொள்ளும் காலத்திற்கே இந்தப் பெயராகும். இந்தச் "சாந்தியும்" உயிரின் மற்ற வேலைகளைப்போல் "ஜாக்கிரதாவஸ்தை"யே யாகும். அங்ஙனமின்றி "சாந்தி"க்குத் தூக்கம் அல்லது மரணம் என்ற பொருளில் நாம் கொள்வோ மல்லேம். அவ்விதம் கொள்வதாயின் அந்தச் சாந்தி நமக்கு வேண்டுவ தன்று. அதற்கெதிரான நிற்சாந்தியே நாம் வேண்டற் பாலதாகும். ஏனெனில் "நிற்சாந்தியே" தனக்குச் சுபாவமான உயிரையும் நீண்டாயுளையும் கொடுக்கிறது.

உயிரை யுடைய மனிதன் தூக்கம், மரணம் என்ற நிலைமைகள் ஒழிந்த எந்தச் சமயத்திலும், சாந்தி யென்ற அல்லது சுத்தமாகச் சுறுசுறுப்பற்ற பதத்தில் இருப்பது கஷ்டமாகும்.

அன்றித் தூக்கத்தையே சாந்தியென் றழைப்போமானல் அச் சாந்தி நம்மால் எதிர்த்துத் தகர்க்கத் தக்கதாகும். அத்தகைய சாந்தி எந்த ஜீவராசிக்கும் இயற்கையில் உரித்தான தல்ல. மனிதன் ஒன்றுபட்ட எண்ணத்துடன் ஒரு பொருள் அல்லது இடத்தை நாடிக், குறியாகக்கொண்டு தனது சகல எண்ணங்களையும் அதில் ஒன்றுபடுத்தி "ஏகாக்கிர சித்தனு"யிருக்குங் காலத்தில் இதைச் சாந்தி யென்ற தூக்கத்தின் பொருளைக் கொண்டழைத்தல் கூடாது. இது உயிரின் ஜாக்கிரதாவஸ்தை யாகையால் இதையும் உயிரின் இயற்கையான வேலையாகிய "நிற்சாந்தி" என்றே கூறுதல் வேண்டும். ஏனெனில் இந்நிலையில் தூக்கத்தின் குணங்கள் ஒன்று மிருப்ப தில்லை. உயிரின் வெப்பமும், ஒளியும், ஆராய்ச்சியுமே விளங்கி நிற்கின்றது. ஆகவே நித்திரையின் நிலையைக்கொண்ட சாந்தியை நீண்டாயுளை விரும்புவோர் எப்போதும் எதிர்த்து நிற்றல் வேண்டும். ஆகவே நாம் விரும்புவது சாந்தி யன்று, "நிற்சாந்தி, நிற்சாந்தி, நிற்சாந்தி."

பா. ஆதிமூர்த்தி.

நகரும் மலை

ஐரோப்பாவில் பிரான்ஸ், ஸ்விட்ஜர்லந்து, இத்தலி நாடுகளில் ஆல்ப்ஸ் என்னும் பெரிய மலைத்தொடர் பரவி நிலைபெற்றிருக்கிறது. இம்மலையின் சிகரங்கள் சில அவ்வப்போது நழுவி விழுந்து பக்கத்திலுள்ள கிராமங்களை அழித்து விடுவதுண்டு. இதுபோழ்து ஆருயிரம் அடி உயரமுள்ள ஆர்பெடோ என்னும் சிகரம் இவ்வாறு நகர்ந்துகொண் டிருக்கிறதாம். சுமார் முக்கால் மைல் அகலத்துக்குப் பல வருஷங்களாகவே இது நகர்ந்துகொண்டு வருகிறதாயினும் இப்போது அபாயம் அதிகரித்திருப்பதாகத் தெரிகிறது. முப்பது வருஷங்களுக்கு முன் வருஷத்துக்கு முக்கால் அங்குலந்தான் இது நகர்ந்ததாம். ஆனல் இப்போது வருஷத்துக்கு எட்டு அங்குலம் வீதம் நகர்கிறதாம். ஸ்விட்ஜர் லாந்தில் பள்ளத்தாக்குகளில் தான் நகரங்கள், கிராமங்கள், ரயில்வேக்கள் முதலியன எல்லாம். எனவே மலையொன்று சரிந்து விழுவதென்ருல் எத்தகைய ஆபத்து என்று சொல்ல வேண்டுவதில்லை. அந்நாட்டு அரசாங்கத்தார் இதற்காக வேண்டிய முன்னெச்சரிக்கை எடுத்துக்கொண் டிருக்கிருர்கள் என்று தெரியவருகிறது.

ஒழுக்கம்.

ஸ்ரீமான். அ. ச. அருணசல ரெட்டியார் எழுதியது.

ஒழுகு—பகுதி, அம்—விகுதி; விரித்தல் விகாரம், தொழிற்பெயர்.

நாம் ஒவ்வொருவரும் முற்பிறப்பில் மரம் பறவை விலங்கு என்ற பல எண்ணரிய பிறவிகளாகப் பிறந்து கடைசியில் இவ்வரிதான மக்கட் பிறவியை அடைந்திருப்பது முக்தி வீடாகிய பேரின்பச் சுவையை (மோட்ச வீட்டை) அடைதற்கே. அவ்வீட்டை யடைதற்கு அறம் என்பதே முக்கிய சாதன மாகையால் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நான்கு வருணத்தாரும், தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரியம் முதலிய நிலைகளில் நின்று அவ்வவற்றிற்கு உரியவை யெனக் கடவுளால், மக்கள் உய்யுமாறு, தமது அடியார் வாயிலாய் வெளியிடப்பட்ட வேதத்தில் விதிக்கப்பட்டபடி அறவழிகளில் தவறுமல் நடக்க வேண்டும். இப்படித் தவறுமல் நடப்பதற்கே "ஒழுக்கம்" என்று பெயர். இவ்வொழுக்கம் தருமத்தின் வகை மூன்றனுள் முதலாவ தாம். (மற்றவை வழக்கும் தண்டமு மாம்.) ஒழுக்கத்தை வடநூலார் "ஆசாரம்" என்பர்.

"ஒழுக்க முடைமை குடிமை யிழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்"

என்ற பொது மறைப்படி இழிந்த குலத்தில் பிறந்தவரும் ஒழுக்கத்தால் உயர்ந்த குலத்தவ ராவர். உயர்ந்த குலத்திற் பிறந்திடினும் ஒழுக்கந் தவறியவர் தாழ்ந்த சாதிய ராவர். ஒழுக்கமுடையவர் கல்லாதவ ராயினும் அவருக்கு நன் மதிப்பு உண்டு. அவர் என்றும் இன்பமே அநுபவிப்பார். ஆனல் "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம், தீ யொழுக்கம் என்று மிடும்பை தரும்" என்றபடி அவ் வொழுக்கத்தி னின்று தவறியவர்க்கு என்றும் துன்பமே உண்டாகும். அவர்கள் எல்லாராலும் இகழப்படுவர். ஒழுக்க மில்லாதவனை அவனுடைய மனைவி மக்களே மதியா ரெனின் வேறு எவர்தான் மதிப்பார்.

ஒழுக்கந் தவறு திருப்பவன் இம்மைக்கு வேண்டிய எல்லா நன்மைகளையும் பெறுவதோடு, மறுமையில் என்றும் நிலை நிற்கும் அழியாத புகழுடம்பைப் பெற்றுப் பேரின்ப வீட்டையும் அடைவான். அவன் இறந்த பின்னும் அவனுடைய புகழ் என்றும் நிலைத்திருக்கும்.

உலகத்தார் எவ்வாறுன நிலைமையோடு கூடி ஒழுகுகின்றார்களோ அவ்வாறுன ஒழுக்கத்தில் நின்று அவ் வொழுக்கம் அழிதற்

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
210356
சென்னை-600 008

குக் காரணமான வற்றைத் தம்மிடம் வந்து நேரிடுதற்கு முன்னரே நேராதபடி கவனத்தோடு தடுத்து அவ்வொழுக்கத்தைக் காத்தலே நல்லோர்களுக்குச் சிறப்பாம்.

ஒழுக்கம், நல்லொழுக்கம் தீயொழுக்கம் என இருவகையாகப் பிரிக்கப்பட் டிருக்கிறது. பெரியோரால் விதிக்கப்பட்டபடி நடத்தல் நல்லொழுக்க மெனவும், விதிக்கப் படாதவற்றின்படி நடத்தல் தீ யொழுக்க மெனவுங்,கூறப்படும். நல்லொழுக்கங்க ளாவன :—

"பொறை கொடை கருணை தானம்
பொய்மொழி அழுக்கா றின்மை
உறையு முட் கர ணங் காத்தல்
பயில்புறங் கரண மோம்பல்

குறளை சொல்லாமை நாளும்
முனிவின்மை உயிர் கொல்லாமை
பிறர் மனை நயத்த லின்மை
நன்மொழி பிறழா வாய்மை

"புண்ணிய நந்நீ ராடல்
கடவுளர் பூசை யாற்றல்
உண்ணிறை மகிழ்ச்சி வேத
பாரகர்க் கூட்டல் தீய
கண்ணய வாமை கள்ளா
தொழுகுதல் கடுஞ்சொல் லின்மை
எண்ணிய இவைகள் நான்கு
குலத்திற்கும் இயைந்த வாமால்." (கூர்மபுராணம்.)

என்பனவும், பெற்றோர் பேணல், பெரியோர் சொல்வழி நிற்றல், அடைந்தாரை ஆதரித்தல் முதலிய பல நற்குணங்களாம்.

பொறை :—அறியாமலாவது காரணம் பற்றியாவது ஒருவன் நமக்குக் குற்றம் செய்த விடத்து நாமும் அதனை அவனிடத்துச் செய்யாது பொறுத்தலாம். ஒருவன் பொறுமை யுடையவனா யிருப்பின் அவன் எக்காரியத்திலும் வெற்றி யடைவான். "பொறுத்தார் பூமி யாள்வார், பொங்கினர் கா டாள்வார்," "பொறுமை கடலினும் பெரிது" என்ற பழமொழிகளைக் காண்க.

கொடை :—ஒன்று மில்லாது வறியராய் இரந்தவர்க்கு இல்லை யென்னாது கொடுத்தலாம்.

கருணை :—உறவு, முறைமை, சினேகம் முதலிய யாதொரு தொடர்பு மில்லாமல் இயல்பாக எல்லா உயிர்களின் மேலும் செல்வதாகிய அருள் ; "அருளிலார்க் கவ்வுலக மில்லை,

பொருளிலார்க் கிவ்வுலக மில்லை" எனப் படுவதால் எவரும் அருள் (பிற வுயிர்களின் மேல் இரக்கம்) உடையவரா யிருக்க வேண்டும்.

தான மாவது :—சற்பாத்திரமா யுள்ளோர்க்கு அறஞ் செய்தல். "தானமது விரும்பு," "அறஞ் செய விரும்பு," "ஐய மிட்டுண்" என்று அம்மையார் அருளி யிருப்பதையும், "அறத்தினூஉங் காக்கமு மில்லை அதனை, மறத்தலி னூங்கில்லை கேடு" என்று திருவள்ளுவ நாயனர் அருளி யிருப்பதையு முணர்க.

பொய் மொழி யின்மையாவது :—பிற வுயிர்க்குத் தீங்கு தராத உண்மையை உணர்த்தலாம். "வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும், தீமை யிலாத சொலல்," என்றார் நாயனர். எப்பொழுதும் மெய்யையே பேச வேண்டும். கண்டது கண்டபடியே சொல்ல வேண்டும். "இணங்குறு வாய்மை மெய்ம்மையே யெனினு[ம்]மியம்பொணு" தென்றபடி நிகழ்ந்ததா யிருப்பினும் தீங்கு தருவதா யிருப்பின் அதைக் கூறுதல் தகாது, தீங்கு தராதாயின் மாத்திரம் நிகழ்ந்தது கூறவேண்டும்.

அழுக்கா றின்மையாவது :—மற்றொருவர் செழுமையா யிருப்பதைக் கண்டு மனம புழுங்குதல் இன்மையாம். "கொடுப்ப தழுக் கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉ, முண்பதூஉ மின்றிக் கெடும்," என்றபடி பொறாமையானது தன்னை யுடையாரையே யன்றி அவரோடு சம்பந்தப் பட்டவரையும் மிகவுங் கெடுக்குங் கொடிய தீக் குணமாகும்.

உள் கரணம் புறக் கரணங் காத்தலாவது :—மனம், புத்தி, சித்தம், அகங்காரம்;என்னும் உள்ளுறுப்புக்களையும் மெய், வாய், கண், மூக்கு, செவி!என்னும் ஞானேந்திரியங்களையும், கை கால் முதலிய கருமேந்திரியங்களையும் தீய வழியிற் செல்லாது தடுத்துப் பாதுகாத்தலாம்.

குறளை சொல்லாமையாவது :—பிறர் மேல் கோள் சொல்லாமை. கோள் சொல்லுபவர் பழி பாவங்களுக்கு ஆளாவா ராதலின் அவரை ஒருவரும் மதியார். ஆகையால் அத் தீய குணத்தை ஒழித்திட வேண்டும்.

முனிவின்மை யாவது :—கோபத்தைக் கைக்கொள்ளா திருத்தல். எப்படிப் பட்டவரையும் கோபமானது கெடுத்து விடும். "கோபமே பாபங்களுக் கெல்லாம் தாய் தந்தை," "தன்னைத் தான் காக்கிற் சினங் காக்க காவாக்கால், தன்னையே கொல்லுஞ் சினம்" என்றபடி கோபம் பாபம் விளைவிப்பது மன்றி அது தன்னைக் கொண்டவனையே கொல்லும் கொடிய குணமுடையது.

ஒழுக்கம்

"கோபமே பிறவியைக் கொடுக்குங் கொள்கையாம்,
கோபமே அறிவினைக் குறைக்குங் குட்டநோய்,
கோபமே தாயையுங் கொல்லுந் திண்படை,
கோபமே தவத்தினைக் குலைக்கும் பேயரோ!"

உயிர் கொல்லாமை யாவது:—பிற உயிர்களின் உயிரை அவற்றின் உடலினின்று பிரித்தலாம். "சாதலின் இன்னாத தில்லை" என்றபடி மரணத்தினுங் கொடிய துன்பம் வேறில்லை யன்றோ? ஒரு உயிருக்குத் துன்பம் விளைத்தலே அதைக் கொல்லுவதாம். கொலை செய்தல் எல்லாப் பாபங்களிலும் பெரிய பாபமாகும். "கொல்லா விரதங் கொண்டவரே நல்லோர் மற்றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே" என்று கொலையின் கொடுமையை வியந்துரைத் துள்ளார் பெரியோரும். "புலையுங் கொலையுங் களவுந் தவிர்" என்றார் அம்மையாரும். மாமிசம் புசித்தலாலேயே கொலை செய்ய நேரிடுகிற தாகையால் மாமிசம் புசித்தலை வெறுத்துவிட வேண்டும். "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா வுயிருந் தொழும்" என்ற நாயனார் திருமொழி உணரத் தக்கது.

பிறர் மனை நயத்தலின்மை யாவது:—அயலாருடைய மனைவியர்மேல் இச்சை கொள்ளாமை. பிறர் மனைவியர் மேல் இச்சை கொள்ளுதலால் பல தீங்குகளுக்கும் பாபத்திற்கும் ஆளாகிக் கடைசியில் நரகத்தில் பெருந் துன்பம் அநுபவிக்க வேண்டும்.

"அறம், புகழ், கேண்மை, பெருமை யிந்நான்கும்
பிறன்றார நச்சுவார்ச் சேரா—பிறன்றார
நச்சுவார்ச் சேரும் பகை, பழி, பாவமென்
றச்சத்தோ டிந்நாற் பொருள்."

நன்மொழி யாவது:—எவரிடத்தும் எப்பொழுதும் இனிமையானதும் நன்மையானதுமான சொற்களால் பேசுவதாம். எவரிடத்தும் இன்சொல்லே கூறுபவர்க்குப் பகை வரும் அயலாரும் இல்லை யாதலால் யாவரும் நண்பரே யாகின்றனர். ஆகவே அவர் எல்லா நன்மைகளையும் அடைவார். "இன்சொல்லா லன்றி இருநீர் வியனுலகம் வன்சொல்லா லென்றும் மகிழாதே" என்றபடி இன்சொல்லி னாலேயே உலகம் மகிழுகிறது. நன் மொழிகளைக் கூறுதலால் நமக்கும் பிறருக்கும் அறம் பொருள் இன்பமாகிய பயன்களும் எதுவும் கிடைக்கும். தீ மொழிகளைக் கூறுவதால் முற்கூறிய வற்றில் ஒன்றும் கிடைக்கப் பெறாததோடு பழி பாவங்களுக் காளாக வேண்டும். "ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய, வழுக்கியும் வாயாற் சொலல்". ஆதலால் எப்பொழுதும் எவரிடத்தும் இனிமை நன்மை இரண்டும் பயப்பனவான சொற்களையே பேசுதல் வேண்டும்.

பிறழா வாய்மை யாவது :—சொன்ன சொல் தவருமை. சொன்ன சொல் தவறி நடத்தல் மிக்க பாப மாகும். ஒருவனைக் காப்பதாக முதலில் உறுதி கூறிப் பிறகு "நம்பினவனை நட்டாற் றில் விட்ட கதையாக"ச் செய்தல் அவனைக் கொல்லுவதற்கே ஒப்பாகு மன்றோ ?

புண்ணிய நன்னீ ராட லாவது :—நல் வினையைத் தருவன வான நல்ல தீர்த்தங்களில் நீ ராடுவ தாம். நல்லொழுக்கங்களில் பயிலாது நீராடுதல் மாத்திரம் செய்கிறவர்களுக்கு மனத் தூய்மை உண்டாகாது. அதனல் நல்லொழுக்கங்களில் பயின்று வந்தால் மனத் தூய்மை பெறலாம்.

கடவுளர் பூசை யாற்ற லாவது :—தேவர்களுக்குப் பூசை செய்தலாம். தேவர்களுக்குப் பூசை செய்வதற்குப் பால் பழம் முதலிய மங்கலப் பொருள்களே சிறந்தனவாம். பலியிடுதல் முத லிய உயிர் வதை செய்யும் பூசைகள் கடவுளுக்காகா. அவ்விதம் செய்வதும் கடையான (கீழ்த்தரமான) பக்தியே யாம்.

பக்தி யென்பது :—மன்னுயி ரனைத்தும் கடவுளைத் தொழுது அவர் திருவடி நிழலாம் பேரின்பப் பேற்றை அடைதற்காகக் கைக் கொள்ள வேண்டிய, மிக்க அவசியமான, வணக்கத்தோடு கூடிய அன்பாம். எத்தொழிலை இயற்றிடினும் கடவுளை வணங்கிச் செய் வதால் அதை இனிது முடித்து விடலாம். கடவுள் பக்தியானது மக்களானோரைப் பாப வழியிற் செல்லாமல் தடுத்து நல்வழியிற் செல்லத் தூண்டுகின்றது. ஆதலால் நாம் அனைவரும் நாள்தோறும் கடவுளைத் தொழுதலை முதற் கடமையாகக் கொண்டு அதனை முத லிற் செய்துவிட்டுப் பின் எந்த வேலையும் தொடங்கவேண்டும்.

உள் நிறை மகிழ்ச்சியாவது:—மேல்மேல் ஆசையும் அதிருப்தி யும் இல்லாமல் கிடைத்த வளவில் போது மென்று திருப்தியுற் றிருத்தல். ஆசை ஒழியாத பிறப்புக்குக் காரண மாகும். "அவா வென்ப வெல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்றும், தவா அப் பிறப்பீனும் வித்து" என்ற பொது மறையைக் காண்க. இன்னின்னது விரும் பத் தக்கது இன்னின்னது விரும்பத் தகாதது என்ற ஒரு வரம் பில்லாமல் எல்லாப் பொருள்களிலும் ஆசை வைத்தால் அதனுலே தான் பிறருக்கு அபகாரம் செய்யவும் பின்பு அதைக் குறித்துத் தான் மனம் வருந்தவும் நேரிடும். ஆதலால் "நன்றுங்கால் நல்ல வாக் காண்பவர், அன்றுங்கால் அல்லற்படுவ தெவன்" என்றபடி பட்சபாத மில்லாமல் நல்வினைப் பயனுன இன்பத்தைப் போலவே தீவினைப் பயனுன துன்பத்தையும் நமக்கு உரிய தென்று கருதி, அவ் வினைப்பயனுக்கு எற்பக் கடவுள் அளித்தது இவ்வளவு என்று நிச்சயித்துக் கிடைத்தமட்டில் திருப்தியோடு எப்பொழுதும் இருக்கவேண்டும்.

ஒழுக்கம்

வேதபாரகர்க் கூட்டலாவது:—வேதங்களைக் கரைகண்ட அந்தணர்க்கு உணவளித் துண்பித்தலாம். கடவு ளடியார்களே வேதங்களைக் கரை கண்டவரா யிருப்ப ராதலால் அவர்களுக்கு நாம் தொண்டு செய்ய வேண்டும்.

தீய கன்னடைப வாமையாவது:—கொடுஞ் செயல்களைக் காணு தற்கும் விரும்பாமையாம். அதாவது கெட்ட காரியங்களைச் செய்ய விரும்பா திருத்தலாம். கெட்ட காரியங்களைச் செய்வதனுல் கெட் டவ னென்றே பெயர் எடுக்க வேண்டு மாகையால் அவற்றைச் செய்யாது நற்பெய ரெடுக்க நற்காரியங்களைச் செய்யவேண்டும்.

கள்ளா தொழுகுத லாவது:—பிறர் பொருளைக் களவு செய்யா திருத்தலாம். களவு செய்தல் பஞ்சமகா பாதகங்களுள் ஒன்று. களவு செய்வதனுல் இம்மையில் யாவரிடத்தும் பகையுண்டாவ தோடு அரச தண்டனையும் மறுமையில் நரக தண்டனையுங் கிடைக் கும். தம்முடைய பொருளைப் பிறர் திருடிக்கொண்டு போய்விட் டால் தமக்கு எவ்வளவு வருத்தந் தருமோ அவ்விதமே பிறர் பொருளை நாம் எடுத்தாலும் அவர்களுக்குப் பிரிய மிராதென் றுணர்ந்து இத் தீத்தொழிலை விடவேண்டும்.

கடுஞ்சோல் லின்மை யாவது:—ஒருவர் மனம் புண்படத்தக்க விதமான கடுகடுத்த பேச்சுக்களைப் பேசா திருத்தலாம். நம்மைப் பிறர் கடுஞ் சொல்லாற் பேசினுல் நமக்கு எவ்வளவு வருத்த முண் டாகுமோ அவ்விதமே பிறரையும் கடுஞ் சொல்லாற் பேசினுல் அவர்களுக்கும் வருத்த முண்டாகும். கடுஞ்சொற் கூறுபவனை எல்லாரும் வெறுப்பார்கள்.

பெற்றோர்ப் பேண லாவது:—தம்மை வருந்திப் பெற்று வளர்த்த தாயையும் தந்தையையும் காத்து அவர்கள் சொற்படி தவறாமல் நடத்தல். நாம் தெய்வத்தை வணங்கவேண்டியது முதற் கடமையே யெனினும் அத்தெய்வத்தை நேரில் கண்டு வணங்க முடியாது. அதற்குப் பதிலாக நம்மை உற்பத்தியாக்கிக் காத்துவந்த பெற்றோரை, நாம் பிறந்ததிலிருந்து கண்கண்ட தெய்வங்களாக நேரிற் காணப் படுபவ ராதலால், வணங்கி வரவேண்டும். "அன்னை யும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற அம்மையார் வாக்கையு முணர்க.

பெரியோர் சோல்வழி நிற்றலாவது:—அறிவிலும் அநுபவத் திலும் சிறந்த பெரியோர்கள் சொற்படி நடத்தலாம். "மூத்தோர் சொல் வார்த்தை யமிர்தம்" என்பது இதற்குச் சான்றாம்.

அடைந்தாரை ஆதரித்த லாவது:—தம்மை நம்பி ஒருவர் அடைக்கலம் புகுந்தால் அவரை வெறுக்காது காத்து வருதலாம்.

அஃதன்றி அவரைக் கைவிட்டுத் தீங்கு செய்வோமாஞல் தீவாய் நரகிடைப்போய்ச் சேர்ந்து வருந்துவோ மென்ப துண்மை.

இனித் தீ யொழுக்கங்க ளாவன:—பிற வுயிர்களுக்குத் துன்பஞ் செய்து பொருள் தேடல், சூதாடுதல், தீயாரோடு சேர்தல், கர்வங் கொள்ளுதல், புறங்கூறுதல், செய்ந்நன்றி மறத்தல், பொய்ச் சாட்சி சொல்லுதல், நடுவு நிலைமை தவறுதல் இன்னும் பல தீ நடத்தைகளுமாம். இத் தீ நடத்தைகள் ஒவ்வொன்றும் தீமை பயப்பனவாகையால் அவைகளை விட்டொழிக்க வேண்டும்.

பிறவுயிர்க்குத் துன்பஞ்செய்து பொருள் தேடலாவது:— ஒரு உயிரை வருத்திப் பொருள் சம்பாதித்தல். "பிறவுயிர்க் கல்லல் புரிந்தே பொருளீட்ட லாகா" என்ற ஆன்ருேர் வாக்கை உணர்க. "கள் விற்றுக் கலப்பணம் சம்பாதிப்பதை விடக் கற்பூரம் விற்றுக் கால்பணம் சம்பாதிப்பது மேல்" என்றதுவும் இது பற்றியே. பிறவுயிர்க்குத் துன்பஞ்செய்து சம்பாதித்த பொருள் ஒரு போதும் நிலைத்திராது.

சூதாடுதல்:—இது ஒரு கெட்ட பழக்கம். இச் சூதிஞல் கொலை களவு கள்ளுண்ணல் குருத் துரோகம் பொய் என்ற பஞ்ச மகா பாதகங்களும் நேரிடுமாதலால் இதுவும் அப்பஞ்சமகா பாதகங்களின் உட்பிரிவே யாம். இவை யன்றி இன்னும் பல கெட்ட நடத்தைக ளெல்லாம் இச் சூதிஞலேயே உண்டாகின்றன. பிறவுயிர்க்குத் துன்பஞ்செய்து சம்பாதித்த பொருளைப் போலவே இச் சூதிஞல் வரும் பொருளும் நிலையாது. ஆகையால் சூதாடுதல் மிகக் கொடிய பாபமான தொழிலென்று கருதிக் கைவிடவேண்டும்.

தீயாரோடு சேர்தல்:—தீய நடத்தை யுள்ளவரோடு சேர்ந்தால் தீய குணமே ஏற்பட்டு அவர்களைப்போல் பல தீங்குகளுக்காளாக வேண்டு மாதலால் தீ நட்பை இகழ்ந் தொதுக்க வேண்டும். இதற்குப் பதிலாக நல்லொழுக்க முடையாரோடு நட்பு கொள்ள வேண்டும். இதுபற்றியே "பெரியாரைத் துணைக்கொள்," "அறிஞரோ டிணங்குக" என்றனர் ஆன்ருேர்.

கர்வங் கோள்ளுத லாவது:—எக்காரியமும் தன்ஞலான தென்றும், எல்லோரையும் விடத்தானே சிறந்தவனென்றும் எல்லாவற்றிலும் நான் நான் என்றுகூறி நடத்தலாம். இத் தீக் குணத்தை யுடையவன் எல்லாருக்கும் பகைவ ஞகிருன். அதஞல் அவனுக்கு இம்மை மறுமை இருமையிலும் தீமை விளைகிறது. தம்மைவிட மேலானவர் உலகில் பல ருளர் என்று நினைத்தவர்க்கு இக் கர்வக் குணம் அகலும்.

புறங் கூறுதல் என்பது:—அயலாருடைய குற்றங்களை அவரைக் காணுத விடத்து எடுத்துச் சொல்லி இகழ்தல். ஒருவன்

நம்மை ஏதாவது காரணமில்லாமலே நமக்கு வருத்த முண்டாகும்படி பழித்துப் பேசினுலும் அவ னெதிரி லல்லாமல் புறத்தில் அவனை இகழ்ந்து பேசுதல் கூடாது. "புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்த லிற் சாதல், அறங் கூறும் ஆக்கந் தரும்" என்றபடி புறங்கூறி வாழ்தலினும் இறந்துவிடுவது மேலாம்.

செய்ந்நன்றி மறத்தல்:—ஒருவர் நமக்குச் செய்த உபகாரத்தை என்றும் மறவாது நினைத்திருத்தல். செய்த நன்றியை மறப்பவன் கொடிய நரகில் வீழ்ந்து அகலாத துன்பத்தையே அநுபவித்திருப் பான். "எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை, செய்ந் நன்றி கொன்ற மகர்க்கு" என்ருர் நாயனுரும். இதனுலேயே "நன்றி மறவேல்" என்ருர் ஔவைப் பிராட்டியாரும்.

பொய்சாட்சி சொல்லுதல்:—இது இம்மை மறுமை இரண் டிலும் துன்பந் தரக்கூடிய ஒரு கெட்ட குணமாகும். அதனு லேயே "பொய்க்கரி போகன்மின்" என்ருர் பெரியோரும்.

நடுவு நிலைமை தவறுதல்:—பகைவர், நண்பர், அயலார் என் னும் மூன்று வகையாரிடத்தும் ஒருவருக்கு உபகாரமாயும் மற் ருெருவருக்கு அபகாரமாயும் பேசுதல். இக்குணம் ஒருவனிடத் தில் இருக்குமானுல் அவன் அதை உடனே அழித்துவிட வேண் டும். இன்றேல் பலருடைய இகழ்ச்சிக்கு உட்படுவான். ஆகை யால் எவராயிருப்பினும் பட்சபாத மில்லாமல் பேசவேண்டும்.

ஆடவர்கள் ஒழுகவேண்டிய நல்லொழுக்கங்கள் இன்னும் பல உளவெனினும் இம்மட்டோடு நிறுத்திப் பெண்டிர் கடமையைச் சிறிது கூறுவோம். முன்னர் ஆடவர்களுக்குக் கூறப்பட்டுள்ள ஒழுக்கங்களில் பெண்கள், கைக்கொண் டொழுகவேண்டிய ஒழுக்கங் களும் பல உள. ஆடவர்களைப்போலப் பெண்களும் கடவுளைத் தொழுவதை முதற் கடமையாகக் கொண்டிருக்க வேண்டு மெனி னும், அவர்கள் தங்கள் கணவர்; கூன், குருடு, செவிடு, முடம் முத லிய உடல் பழுதுள்ளோராயும், நோய், வறுமை, கிழப்பருவம், தீ நடத்தை யுள்ளவராயும் இருந்தாலும், "கல்லானுலும் கணவன், புல்லானுலும் புருடன்" என்றபடி அவர்களைத் தெய்வமாக வணங்கி வந்தால், அதுவே கடவுளுக்குச் செய்யும் வணக்கமாகும். அப்படிப்பட்ட பெண்களுக்குக் கடவுள் மிக்க அன்புடனே அருள் புரிகிருர். அவர்களையே கற்புடைப் பெண்டிர் எனக் கூறுவது. கற்புடைய பெண்களால் செய்ய முடியாத தொன்றுமே யில்லை. "தெய்வந் தொழாஅள் கொழுநற்றொழு தெழுவாள், பெய்யெனப் பெய்யு மழை" என்றபடி அவள் மழையைப் பெய்யென்ருலும் பெய்யும். இத்தகைய பெருமை வாய்ந்த கற்பைக் காத்துக்கொள் வதற்குப் பெண்கள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நாற்

குணங்களையும் கைக்கொள்ளவேண்டும். இவற்றையன்றி விருந்தோம்பல், ஈகைக்குணம், பிற ஆடவர்மேல் இச்சைகொள்ளாமை, உண்மை மொழிதல், மக்களை வளர்த்தல் முதலிய நற்குணங்களையும் கைக்கொள்ள வேண்டும்.

இம்மாதிரி மேற் கூறப்பட்ட ஒழுக்கங்களை ஆடவரும் பெண்டிரும் கைக்கொண்டு நடந்து வருவார்களாஞல் அவர்களுக்கு என்றும் நன்மையே உண்டாகும். எனவே நாம் அனைவரும் நல்லொழுக்க முடையோரா யிருக்கப் பழகுவதோடு அதற்கு உதவி புரியுமாறு இறைவனை மனமாறத் தொழுவோ மாக.

ஓம் தத் சத்.

ஓநாய் மனிதன்.

சீன தேசத்தின் தெற்குப்பாகத்தில் சில விஞேதமான பிராணிகள் இருப்பதாகத் தெரியவந்திருக்கின்றன. இது வரை இப்பிரதேசத்திற்குள் நாகரிக மனிதர்கள் அதிகமாகப் பிரவேசிக்கவில்லை. பறக்கும் பாம்புகளும் மற்றும் பல பயங்கரப் பிராணிகளும் இங்கு இருப்பதாக சீனர் நம்புகின்றனராம். டாக்டர் கால்ட்வெல் என்பார் இப்போது இப்பிரதேசத்துக்குள் நுழைந்து கண்டு பிடித்திருப்பதாகக் கூறும் விவரங்கள் சீனர்களின் நம்பிக்கை முற்றும் ஆதாரமற்றதன்று எனக் காட்டுகின்றன. நீல நிறமான புலிவர்க்கம் ஒன்று இங்கிருப்பதாக அவர் சொல்கிருர். வெள்ளாட்டுக்கும் கலைமானுக்கும் இடையில் வரும் ஒருவகைப் பிராணியும் இருக்கிறதாம். ஆஞல் இவைகள் எல்லாவற்றையும் விட அதிசயமான பிராணி நாய் முகம்படைத்த மனிதன். இம் மனிதர்களின் உடல்முழுதும் நீண்ட உரோமத்தால் மூடப்பட்டிருக்கிறதாம். இவர்கள் மரங்களில் வசிக்கிருர்களென்றும், சிறிதும் நாகரிகம் எய்தாத காட்டு மிராண்டிகளென்றும் தெரியவருகின்றன.

வைதிக தேவதைகள்.

(172-ம் பக்கத் தொடர்ச்சி.)

II

தேவதைகளின் வடிவம்.

ஸ்ரீமாந் த. ராமகிருஷ்ணன் அவர்கள்

(வேத மாணுக்கன்.)

I. மறை நூற் கொள்கை.

தோற்றுவாய்

திருநான் மறைகளையும் பயிலுங்கால் நம துள்ளத்தில் எழுவதோர் அரிய வினா 'தேவதைகளை'க் குறித்த தாகும். தேவதைகளென்னும் பெயரால் எவை உணர்த்தப்படுகின்றன? அவற்றின் உருவம் யாது? குண நலன்கள் யாவை? இவற்றிற்குத் தக்க விடை கிடைக்கப்பெறாத வரையில், வேத மந்திரங்களின் உண்மைக் கருத்துக்களை உணர்தல் மிக அரிதாம். வைதிக மொழிக் குழாத்தில் 'தேவ, தேவதை' என்னுஞ் சொற்கள் இத்துணை நுட்பம் வாய்ந்ததாக யாண்டும் வழங்கப் படுகின்றன. அவற்றை ஆராய்வார் உள்ளம் துணிவு பெறாது மயக்குறும். எனவே, நான் மறைகளையும் ஆயப் புகுவார் முதற்கண் துணிவுபடுத்தி நிறுவ வேண்டுவது இப்பொருளே யாகும். தேவதைகளின் தொடர்பு ஒவ்வொரு மந்திரங்களிலும் குறிக்கப் படுகின்றன. எம் மந்திரத்தைப் பயின்றாலும் முதற்கண் தேவதையின் உண்மை உருவகம் உள்ளத்தில் படிந்திருத்தல் வேண்டும். பழம் பரம்பரை வழக்கிற் கிணங்க ஆராய்வார்க்கு 'சந்தஸ்-ரிஷி-தேவதை'களின் உண்மைக் கருத்துக்கள் விளங்கப் பெறாது மந்திரங்களின் பொருள் கண்டு நிறுவதற் கியலா. இத்துணைப் பெருமை வாய்ந்ததோர் பொருளாராய்ச்சியின் சிறு உருவத்தை அன்பர்கள் உள்ளத்தில் பதித்திட விழைகின்றேம். அறிவின் மிக்கார் இதனினும் சிறந்த பொருள் நுட்பங் கண்டு தெளிக.

தேவதைகளின் தாய்

தேவதைகளின் பிறப்பினைக் கண்டு துணிவாம். தாய் யாவளெனின்:—

அஹ்தாரயொ ரோதஸீ தேவ புத்ரே
ப்ரத்நே மாதரா யஹ்வீ ர்ருதஸ்ய

இருக்கு வேதம் VI. 17. 7.

'கண்ணகன்று தொன்மை வாய்ந்த வானுலகம் நிலவுலகு மாகிய இரு தாய்மார்களுக்குத் தேவதைகள் மக்க ளாவர். அவர் களை இயற்கையின் ஆணை வழியே நீ தாங்குகின்றனை.' இச் செய்யு ளில் 'தேவ-புத்ரே ரோதஸி' என்று பகரப்படுகின்றமையான் தேவதைகள் யாவும் விண்ணுலகிற்கும் மண்ணுலகிற்கும் மக்களா வர். நடுவண் நிலவுகின்ற பரவெளியையும் குறித்தல் பொருந்தும். (1) நிலவுலகம் (2) நடுவானம் (3) விண்ணுலகம் என மூவகை உலகங்க ளாகலா மென்க. 'ரோதஸி' என்பது நிலவுலகினையும் வானுலகினையும் குறித்தலால் இடை நின்ற அந்தரத்தையுங் கொள் ளுதல் இயைபுடைத்து. எனவே, தேவதைகள் யாவும் இம் மூவகை உலகங்களின் மக்கள் ஆவரென்று இம்மந்திரத்தால் துணி யக் கிடக்கின்றது. மேற் குறித்த செய்யுளில் இரு தாய்மார்க ளென்பதும் புராணங்களில் 'த்வை-மாதுர' என்று குறிக்கப் படு வதும் ஒத்த பொருளின. 'த்வை-மாதுர' என்பது இரு தாய் மார்களிடத்துப் பிறந்த ஒரு தேவன் என்பதாம். இனித் தந்தை யாவரெனின் ?:—

தேவதைகளின் தந்தை.

> *தேவாநாம் ய: பிதர மாவி வாஸதி*
> *ச்ரத்தா மநா ஹவிஷா ப்ரஹ்மணஸ்பதிம்.*

இருக்கு வேதம் II, 26, 3.

'ஆர்வம் மிக்க உள்ளத்தினராம் அடியார்கள் தியாகம் புரி யுங்கால் தேவதைகளின் தந்தையாகிய அறிவின் தலைவனை (ப்ரஹ் மணஸ்-பதிம்) வழிபடுகின்றார்கள்.' இம் மந்திரத்தில் 'தேவாநாம் பிதரம் ப்ரஹ்மணஸ் பதிம்' என்னுந் தொடர் தேவர் யாவருக்கும் தந்தையாவான் பிரஹ்மணஸ்பதி யென்று அறிவுறுத்துகின்றமை காண்க. தேவதைக ளனைத்திற்கும் வானும் மண்ணும் இருதாய் மார்களும் அறிவின் தலைவனாகிய இறைவன் தந்தையு மாவர். மெய் யறிவாகிய தந்தையால் உருப்படுத்தப்பட்ட மக்கள் தேவ ராவர்.

1. தந்தை ஒருவன்-பிரஹ்மணஸ்பதி (அறிவின் தலைவன்).
2. தாயார் இருவர்-வானுலகம் மண்ணுலகம் (த்யாவா, ப்ரு திவி) நுண்பொருள் மூலம், பருப்பொருள் மூலம்.
3. மக்கள்-தேவர் குழாம்.

தேவதைகளின் தாய் தந்தையர்களை இவ்வகையாக வேதத்து அணிந்துரைக்கப் படுகின்றது. ஒரு தந்தைக்கு இரண்டு நன் மனைவி (தர்மபத்னி)களென்று ஈண்டு குறிக்கப் படுகின்றமை யான், பல பெண்களை மணக்கும் வழக்குண்டென்று கொள்ளுத லாகா. யாதெனின், இஃதோர் புனைந்துரையே யாகும். இவ்

வகையான புனையுரைகளைக் காவிய இலக்கணங்களுக் கேற்பப் பொருள் காணுதல் வேண்டும். இதனை:—

பரி ப்ரஜாத: க்ரத்வா பபூத புவொ
தேவாநாம் பிதா புத்ர: ஸந்.

இருக்கு வேதம் I, 69, 1.

'நல்லறங்க ளாற்றுதலான் யாவரினும் மிக்க உயர்நிலை படைத்துக் கொள்ளல் கூடுமென்பது வெள்ளிடை மலை. தேவதைகளுக்குத் தந்தையாவான் மகனுதலுங் கூடும்.' தந்தையும் மகனும் ஒருவனே யாக மாட்டாமையான், இச் செய்யுள் ஒன்றுபடக் கிளக்கின்றமை கண்டு, இதனைச் சிறந்ததோர் அணிந்துரையாகக் கொள்ளுதல் பொருந்தும். இங்ஙனமே, முற்குறித்த 'பிதா, மாதா' என்னும் சொற்களும் ஆராய்தற் பாலன. தந்தையின் ஆன்மாவே மகனதா மென்றுங் கூறுவர். 'ஆந்மா வை புத்ர நாமஸி' என்பது சதபதம் (14-9-4-26). ஆன்மா மனைவி வழிச் சென்று மகனுரு வாதலுங் கூடு மென்பர். இதனை,—

ஆத்மா தேவாநாம் புவநஸ்ய கர்பொ
யதாவசம் சரதி தேவ ஏஷ:

இருக்கு X, 168, 4.

'தேவர் யாவருக்கும் ஒரே ஆன்மா உலகங்க ளனைத்திலும் ஒன்ருகக் கருக்கொண்டு மிளிர்கின்றது. அவ் ஒரு தேவன் தற்சுதந்திரனுக இயங்குகின்ருன்.' என்பதூஉம்;

ஆத்மா தேவாநாம் ஜநிதா ப்ரஜாநாம்,

இருக்கு IV, 3, 7,

ஆத்மா தேவாநாமுத மானுஷாணும்.

அதர்வ வேதம் VII, 111, 1.

'தேவர்களுக்கு ஆன்மாகவும் மக்களைப் பிறப்பிக்கின்றவனுகவும் விளங்குகின்ருன். தேவர்களுக்கும் மக்களுக்கும் ஒரே ஆன்மாவாக இலங்குகின்ருன்.' என வரூஉம் மந்திரங்களால், தேவர் யாவருக்கும் ஒரே ஆன்மா வென்று கற்பிக்கப் படுதல் காண்க. அவ் இறைவ னொருவனே தேவ தேவனுக மிளிர்கின்ருன். அன்றியும்;

தேவொ தேவாநாம் ஹ்ருத்த்யாநி நாம.	இருக்கு IX, 95, 2.
தேவொ தேவாநாம் ஜநிமா விவக்தி.	ஷெ IX, 97, 7.
தேவொ தேவாநாம் ந மிநாமி தாம்	ஷெ X, 48, 11,
தேவொ தேவாநாம் அபய: சிவ: ஸகா.	ஷெ I, 31, 1.
தேவொ தேவாநாம் மர்த்யஸ்த போஜா	மை, சம். IV, 9, 6.
தேவோ தேவாநா மஸி மித்ரோ அத்புத:	இருக்கு I, 94, 13.
தேவொ தேவாநாம் பவித்ர மஸி	தை, சம். I, 4, 2, 1.

'ஒரு தேவனே பல தேவர்களைப் படைக்கின்றவனும், நண்பனும், அடைக்கல மளிப்பவனும் பிறவு மாகின்றான்' இவ் ஒரு தேவன் யாண்டும் நிறைந்தவன். பிறர் அங்ஙன மன்று. இக் கருத்துக்களால் தேவச் சொல் எவ்வெவ்வகையாக ஆளப்படுகின்ற தென்ப துணர்க. ஆன்மாவிற்கும் பிற தேவதைகளுக்கும் இவ் ஒரு மொழியினையே வழங்கப்படுகின்றது. ஆன்மாவின் ஒவ்வொரு ஆற்றல்களாலும் பிற தேவதைகள் தெய்வத்தன்மை எய்துகின்றன. ஆன்மா பிறப்பற்றது; பிற தேவதைகள் பிறப்பன. இத் தேவதைகளின் அமரத்தன்மை (இறப்பின்மை) ஆன்மாவின் பேராற்றலில் அடங்கிக் கிடக்கின்றது. உண்மையில், இவை இறப்பில்லாதன வன்று. அவ் ஆன்மாவின் ஆற்றல் பெற்றே இறப்பின்மை அடைந்திருக்கின்றன. இதனை,—

தேவதைகளின் இறைமைப் பண்புக்கள்.

அஜோ ஹ்யக்நெ ரஜநிஷ்ட சோகாத்
ஸொஅபச்யஜ் ஜநிதார மக்ரே
தேந தேவா தேவதா மக்ர ஆயம்ஸ்தேந
ரோஹ மாயந் நுப மேத்யாஸ் :

எசுர் வேதம் XII, 51.

'நெருப்பில் வெப்பமாகிய தோர் மரண மற்ற தேவனைத் தோற்றுவிக்கப் பட்டிருக்கிறது. முதன் முதலாக அவனால் படைக்கின்றவன தாற்றல் வெளிப்படுத்தப் படுகின்றது. அவனால் தேவர் யாவரும் முதலில் தெய்வத் தன்மை பெற்றனர். அவனால் உயர்வும் அடைந்தனர். தூய்மையும் எய்தினர்.' இவற்றால், அவ் ஒரு பிறப்பற்ற தேவனது ஒளி பெற்றுப் பிற தேவதைகள் தேவத் தன்மை அடைந்திருக்கின்றன. பிற தேவதைகளின் தேவத் தன்மை, மேன்மை, தூய்மை, இறப்பின்மை முதலிய உயர் நலன்கள் அவ் ஒப்புயர்வற்ற ஒரு தேவனது ஆற்றலின் வாயிலாக விளைவதாகு மென்று அறிவுறுத்தப் படுகின்றமை ஓர்க. இன்னும் ;

தேந தேவத்வ ம்ருபவ : ஸமாநச.	இருக்கு III, 60, 2.
தேந தேவா அம்ருத மந்வ விந்தந்.	அதர்வம் XIII, 1, 7.
தேந தேவா அம்ருத மந்வ விந்தந்.	தை. ப்ரா 2, 5, 2, 4.
தேந தேவா அயஜந்த.	இருக்கு X, 90, 7.
தேந தேவா அஸஹந்த சத்ரூந்.	சா. ம. ப்ரா II, 3, 21.
தேந தேவா வ்யஸஹந்த சத்ரூந்.	அதர்வம். III, 10, 12,
தேந தஸ்யூந் வ்யஸஹந்த தேவா.	தை. சம் IV, 3, 11, 3.

'அவ் வொருவனால் பிற தேவதைகள் இறப்பின்மை, தேவத் தன்மை, நல்லினச் சேர்க்கை முதலியன பெற்றனர். இதனையே

அம்ருதத்துவம், தேவதத்துவம், ஸுவர்க்கத்துவம் என்பர். அவ்வொருவனது பேராண்மையால் தேவதைகள் மாற்றாரையும், அறிவீனரையும் (தஸ்யு) வெல்லு மாற்றல் படைத்தனர்.' அவ் ஒரு ஆன்மாவி னாற்றலே பிற தேவதைகளிடத்துப் பரவி நிற்கின்றன என்பதாம்.

தவ ச்ரியா ஷுத்ருசோ தேவ தேவா:
புரு ததானா அம்ருதம் ஸபந்த:

இருக்கு வேதம் V, 3, 4.

தவ ச்ரியெ மருதொ மர்ஜயந்த.

இருக்கு வேதம் V, 3, 3.

'தேவ! நின்னொளியால் பிற தேவர் காண்டற் கினிய வனப் பெய்தினர். இறவாமை அடைந்தனர். இவ் வைதிக கற்பனையால் 'அமரர்' என்னும் பெயர் தேவர்கட்குத் தங்கள் பண்பினால் அமைந்தன வன்றென்பதும்; ஆன்மாவின் அமரத் தன்மையால் பெறப்படுவனவா மென்பதும் புலப்படுத்திய வாறும்.

பரி விச்வா புவனா ந்யாய ம்ருதஸ்ய தந்தும் விததம் த்ருசே கம்.
யத்ர தேவா அம்ருதமானசானா: ஸமானெ யோனா வத்யைர யந்த.

அதர்வ வேதம் II, 1, 5.

'உண்மைக் குறைவிட மாகி, இன்ப வடிவா யிலங்குகின்ற, நூல்போன்று யாவற்றையும் கோர்த்து நிற்கும் பொருளைக் காண்பதற்கு உலகனைத்திலு முறையும் மாந்தரெல்லாம் நாற் றிசைகளிலும் பரவினர். அன்னார் அமர நிலை யெய்திய தேவர்கட் குறைவிடமும் பிறப்பகமு மாகிய தானத்திற்கு உயர்ந்து சென்றனர்.' இச் செய்யுளில் யாண்டும் பரந்த சூத்திராத்மாவால் தேவ ரனைவரும் அமிருதம் அடைதற்குரிய ரென்னும் கற்பனை விளக்கப் படுகின்றது.

தவ க்ரதுபி ரம்ருத த்வமாயந்.	இருக்கு VI, 7, 4.
த்வம் தேவாம் அபிசஸ்தே ரமுஞ்ச:	ஷை VII, 13, 2.
த்வாம் தேவாஸொ அம்ருதாய கம் பபு:	ஷை IX, 106, 8.
யேந தேவா தேவதா மக்ர ஆயந்.	அதர்வம் III, 22, 3.

'நினது நற்செயலால் தேவர் அமரநிலை யெய்துகின்றனர். நின்னால் தேவர்கள் இடர்களினின்று காக்கப் பெறுகின்றனர். இன்ப வடிவனான நின்னை யணுகி தேவர்கள் அமரநிலை பெற்று இன்பம் நுகர்கின்றனர். நின்பா னின்றே தேவ ரனைவரும் முதற்கண் தேவ நிலை பெற்றனர்.' இம்மந்திரங்களும் மேற்சொன்ன கருத்தினை வலியுறுத்துகின்றன.

தேவேப்யொ ஹி ப்ரதமம் யக்ஞி யேப்யொ
அம்ருதத்வம் ஸுவஸி பாக முத்தமம்.

இருக்கு IV, 54, 2.

'போற்றற் குரிய தேவர்கள் யாவருக்கும், யாவற்றினும் முதன்மையாக நுகரத் தக்கதாம் சீரிய அமுதத்தினை நீ அளித்திருக்கின்றனை.'

யேந தேவா ஸ்வராருருஹு-ஹிர்த்வா சரீரமம்ருதஸ்ய நாபிம்.
அதர்வ வேதம் IV, 11, 6.

'தேவர் யாவரும் உடலினைத் துறந்து, நினது ஆதரவால் அமுத மயமான ஒளி வீசும் தானத்தை அடைந்தனர்.' இப் பாவில் தேவரும் உடலினைத் துறந்தே இறவா நிலை (அம்ருதத்துவம்) யெய்தின ரென்ற புதிய கருத் தொன்று வெளியிடப் படுகின்றது. தேவர்கட்கும் பருப்பொருளுடலைத் துறந்தாலன்றி இறவா நிலை யெய்துவதற் கியலாதாம். தாந்தோன்றியான நிகரில் பரமாத்மனை யொப்பப் பிற தேவர்கள் தங்கள் ஆதரவிலேயே நிலவுகின்றார்க ளில்லை. அவர்கள் நிலைபெறுவதற்குப் பரமேசுவரனுடைய சிறந்த ஆதரவு வேண்டப் படுகின்றது, தேவர்கட்கு அமர நிலை, தேவநிலை, சுவர்க்க நிலை முதலியவும் பிறவுமாகிய இறைமைப் பண்புக்கள் இறைவ னொருவனாலேயே அளிக்கப் படுகின்றன வென்பதும், இப்பண்புக்கள் தங்கட்கே இயல்பா யமைந்தன வன்றென்பதும், இறவாநிலை யெய்தற்குப் பருப்பொருளுடலைத் துறந்தே யடைதல் வேண்டுமென்பதும் விளக்கப்பட்டன. இதனுள், மக்களனைவரும் (சு—வர்க்க—நிலை) நல்வினைச் சேர்க்கையால் சீரிய பண்புகள் பயின்று (தேவ—நிலை) மக்களினு முயர்நிலை பெற்று என்றும் இறவா ஆன்ம நிலையாம் அமரநிலை யெய்வதுவ ரென்னும் உண்மை உணர்த்தியவாறு காண்க.

தேவர்கட் கிறைவன் இந்திரன்.

மஹத் தத்வ : கவயஸ்சாரு நாம யத்த தேவா பவத விச்வ இந்த்ரே.
இருக்கு வேதம். III, 54, 17.

'அறிவா னுயர்ந்த தேவர்காள்! நீவிர், அவனது உயர்திருப் பெயரினைச் சூட்டி யிருக்கின்றமை, அவ் ஒரு இந்திரனது ஆதரவில் நீவி ரனைவரும் உறைகின்றமை யா னென்க.' ஒ ரிந்திரன் அல்லது மாபெருந் தலைவனது தலைமையிலும் ஆதரவிலும் பிற தேவர்கள் யாவரும் வாழ்கின்றனர். ஆதலான் அத் தேவர்கள் எப் புகழும் பெறுகின்றனர். இப் பொருள் குறித்து அறிஞர் லுட்விக் (Ludwig) கூறுவன: The glory of the gods consists in their recognition as forming a part of the true, Supreme and all-embracing Divine Principal, in which, as the Absolute God, all their individual attributes are absorbed and vanished. 'அவ் ஒரு உண்மையான, உயர்வுடைய, யாண்டும்

பரந்த, ஒளிமிக்க தலைவனது உறுப்புகளாகப் பிற தேவர்களின் பெருமை யெல்லாம் அடங்கிக் கிடக்கின்றன. அப் பெரும் புகழ் படைத்த இறைவனிடத்துப் பிற தேவர்கள் யாவருடைய குண நலன்களும் ஓர் உருவமாக நிலவுகின்றன.' இவ் வைதிக சித்தாந்தத்தை யாவரும் ஒப்புக்கொள்கின்றனர். வைதிக தர்மத்தில் அவர்களது ஆட்சேபம் காரண மற்றதாக இருக்கின்றது. மறைகளில் பல தேவதைகளைக் குறிக்கின்ற விவாதம் கிடையாது. மறைகளில் கேவலம் ஒரு பரமாத்மனாகிய தேவனைக் குறித்து விரித்துரைக்கப் படுகின்றது. அவனது ஒவ்வொரு ஆற்றலும் பல தேவதைகளாக நிலவுகின்றன. பிற தேவதைகளுக்குத் தற்சுதந்திரமான நிலைமை கிடையாது. இக் கருத்துக்களே ஈண்டு விளக்கப்படுவன. இவற்றால் 'தேவ' என்னும் மொழி எப்பொருள் குறித்து இறைவனுக்கு வழங்கப்படுகின்றதோ அப்பொருள் குறித்தே பிற பொருட்களுக்கும் வழங்கப்படுகின்றன. எனவே, இவற்றால் அறிஞர் மயக்கங் கொள்ளுத லாகாது. வேதங்களில் ஒவ்வொரு மொழியும் பல பொருட்களைக் குறிப்பனவாக ஆளப்பட்டிருக்கின்றன. ஆரியமும் தமிழும் பிற உயர் மொழிகளும் இத் தகைமைத்தே. இக் கருத்தானே 'தேவ' ச் சொல்லும் வழங்கப்படுகின்றது. இதில் வியப் பென்னை? உயர் வென்னை? உயர் நலன்களுக் குறைவிடமாகி உயர்நலன் வாய்ந்த உயிர்கட்கு இறைவனாகித் தலைமை பூண்டிலங்கும் இறைவனன்றோ ஈண்டு இந்திரனென்று உணர்த்தப்படுவது. நிற்க.

II பிராஹ்மண நூற் கோள்கை.

இவ் வேதநூல் முடிபுகளைப் பிராஹ்மண நூல்களில் கதை வடிவமாக மிகத் தெளிவுபட விரித்துரைக்கப் படுகின்றன. பிராஹ்மணங்களாவன மறைகளில் காணப் பெறும் அரும் பொருட்களைப் பல முனிவர்களும் அவ்வக் காலத்து ஆராய்ந்து வெளியிடப் பெற்ற உரை நடைப் பகுதிக ளாகும். அவற்றுள் அம் முனிவர் உள்ளங் கட் கெட்டியவாறு வேதங்களோ டியைவனவும் இயையாதனவும் பல வுள. மறைக் கருத்துக்களோ டியைந்தனவே கொள்ளத் தக்கன. உபநிடதங்களும் இத்தகையன, பலர் வேத சம்ஹிதைகளோடு பிராஹ்மணங்களையும் உபநிடதங்களையும் உடனெண்ணுகின்றனர். இஃது பிழையாம். நான்மறைக ளுக்கும் நான்கு பிராஹ்மணங்கள் உள. அவை முறையே,ஐதரேயம், சதபதம்,சாமம், கோபதம் எனப்படும். புராணம் இதிகாசம் முதலியன இப்பிராஹ்மணங்களில் அடங்கியிருக்கும் கதைப் பகுதிக ளாகும். வேதங்களைச் சார்ந்த உபநிடதங்கள் ஈச கேந கட முண்டக மாண்டூக்கிய ஐதிரேய தைத்திரிய சாந்தோக்கிய பிரசின பிரஹதாரணியமெனப் பத்து வகைப் படும். இப் பெயர்களால் குறிக்கப்படும் பிற

பிராஹ்மணங்களும் உபநிடதங்களும் பதினெண் புராணங்களும் உபபுராணங்களும் பிறவும் பிற்காலத்துப் பலரால் பலவகைப்படத் தொகுக்கப் பெற்றவை. இவை யாவும் பிரமாண நூற்களாகக் கருதத் தக்கவை யன்று. இக்காலத்தும் எத்தனையோ புராணங்களும் உபநிடதங்களும் ஸ்மிருதிகளும் பிறவும் புற்றீசல்போலக் கிளம்புகின்றன. வட சொற்களையும் பார்ப்பனர் வாய்ச் சொற்களையும் வேதச் சொற்களாக வேதக் கட்டளைகளாகக் கொண்டு பலர் தடுமாற்றம் எய்துகின்றனர். முதல் நூற் கருத்துக்கள் மறைந்துபடப் பல புதுநூல்களும் தலைவிரித் தாடுகின்றன. உண்மை நூல்களைக் கற்பா ரிலர், கேட்பா ரிலர், ஆராய்வா ரிலர். ஒரு சமயத்தைச் சார்ந்தார் அச் சமயத்தின் ஒழுகலாற்றினைக் கற்பிக்கும் முதநூலைத் தெளிவுபடப் பயிலவேண்டுவது கடமையன்றோ? பெயர் மாத்திரம் சூட்டிக் கொள்வதால் யாது பயன் விளையும்? கற்கக் கசடறக் கற்றபின் நிற்கவ தற்குத் தக வென்னும் பொன் மொழியைப் போற்றுமின். தமிழர்காள்! நீவிர் எச்சமயத் தீராயினும், அச்சமய நெறி யுணர்த்தும் நூல் எம்மொழியி லிருப்பினும் உண்மை கண்டு தெளிய விழைமின். எக்காலத்தும் ஒரு நிலைப்பட்ட அறத்தினை யுணர்த்தும் மெய்யற நூல்களையே போற்றுமின். யாண்டும் உண்மை காண விழைமின். யாண்டும் நிலைத்த மெய் யறங்களை யுணர்த்தும் விழுமிய நூலாகவே வேதங்களைக் கருதுகின்றோம். மாறுபா டில்லாத உண்மை யுரை கண்டு அதன் நுண்மை தெளிக. இனி, பிராஹ்மண நூற்களில் தேவதைகளின் வடிவத்தினை எவ்வாறு கதை யுருவமாகப் புனைந்துரைக்கப் படுகின்றன வென்று ஆராய்வாம்.

தேவதைகளின் தோற்றம்

ப்ரஜாபதி: ப்ரஜா அஸ்ருஜத. ஸ ஊர்த்வேப்ய: ப்ராணெப்யொ.
தேவாநஸ்ருஜத யெஅவாஞ்ச: ப்ராண ஸ்தேப்யொ மர்த்யா: [ஜத.
ப்ரஜா அதோர்த்வே மேவ ம்ருத்யும் ப்ரஜாப்யொஅத் தாரமஸ்ரு

தஸ்ய ஹ: ப்ரஜாபதே:. அர்தமேவ மர்த்ய. மாஸீ தர்த
மம்ருதம் தத்யதஸ்ய மர்த்ய மாஸீத் தேந ம்ருத்யோ ரபிபேத்.

ததேதா வா அஸ்ய தா:. பஞ்ச மர்த்யா ஸ்தந்வ ஆஸந் லோமத்வங்
மாம்ஸ மஸ்தி மஜ்ஜா அதைதா அம்ருதா மநோ வாக்
ப்ராணஸ் சக்ஷு: ச்ரோத்ரம்.

............தே தேவா அப்ருவந்
அம்ருத மிமம் கரவாமேதி தஸ்யை தாப்யா மம்ருதா ப்யாம்
தநூப்யா மேதாம் மர்த்யாம் தநூம் பரிக்ரஹ்யா ம்ருதா மகுர்வந்.

—சதபத ப்ராஹ்மணம். X,i,iii, 1-2-4-6.

உபயம் ஹைத தக்ரே ப்ரஜாபதி ராஸ: மர்த்வம் சை வாம்ருதம் ச தஸ்ய ப்ராணு ஏவா அம்ருதா ஆஸா: சரீரம் மர்த்யம் ஸ ஏதேந கர்மணே தயா வ்ருதைக தாஜர மம்ருத மாத்மாந மகுருத.

—சதபத ப்ராஹ்மணம். X. i,iv,i.

"(1) மக்கட் தலைவர் மக்களைப் படைத்தார். அவர் உயர்ந்த பிராணனுல் தேவர்களைப் படைத்தார்; தாழ்ந்த பிராணனுல் மனிதரைப் படைத்தார். இப் படைப்புக் கட்குப் பின்னர், அவர் மரணத்தைத் தோற்றுவித்தார். யாவரையும் உண்பதற்கு அதனை ஏவினுர். (2) அம் மக்கட் கிறையின் ஒரு பகுதி இறக்குந் தன்மை (மர்த்யம்) வாய்ந்ததாகவும், மற்ருெரு பகுதி இறவாத் தன்மை (அம்ருதம்) வாய்ந்ததாகவும் நிலவுகின்றது. அவனிடத்து மரிக்கும் பகுதி யொன் றிருத்தலினுல், அவனுக்கு மரண பயம் நேர்ந்தது. (3) இதனுல் அவனுக்கு ஐ வகை மானிட யாக்கைகள் உண்டாயின. மயிர், தோல், தசை, எலும்பு, கொழுப்பு என்ற ஐவகை அம்ருத சரீரம் கிடைத்தது. உள்ளம், உரை, உயிர், கண், காது என்பவற்றைத் (4) தேவ என்று அழைக்கப்படுதலான், யாமிவற்றை இறவா நிலை பெறச் செய்து, அவ்வா றழைக்கப் படுகின்ற அவனது இறவா உடலின் வாயிலாக, இறந்து படும் யாக்கையினை இறவா நிலை யடையச் செய்கின்ருேம். (5) முதலில் மக்கட் தலைவனுக்கு இரண்டு வடிவங்கள் இருந்தன, ஒன்று இறப்பது, மற்ருென்று இறவாதது. அவனது உயிர் மரிக்காதது, உடல் மரிப்பது, இச் செயலினும் ஒழுக்கத்தானும் ஒவ்வொருவரும் தங்களை மூப்பில்லாதவர்களாகவும் இறப் பில்லாதவர்களாகவும் படைத்துக் கொள்கின்றனர்."

இந்த சதபதப்ராஹ்மணக் கதைப் பகுதியால் மக்கள் அமரத் தன்மை அடையு மியல்பினைத் தெளிவுபட விளக்கப் படுகின்றது. முதற் காரணு யிலங்கும் மக்கட் தலைவனிடத்து அமைந்து கிடக்கும் இறவாப் பகுதியின் ஆதரவானும் அணுக்கத்தானும் மரிக்குந் தன்மை வாய்ந்தோர் மரண மின்மை பெறுகின்றனர். ஈண்டு பிரஜாபதி (மக்கட் தலைவன்) என்று குறிக்கப்படுவது ஆன்மா. ஏனைப் புலன்களும் பொறிகளும் பிற தேவதைகள். ஆன்மாவினது உயிர் வடிவமான அமுதத்தால் பிற புலன்களும் உறுப்புகளும் அமரநிலை யடைகின்றது. இக் கருத்துப்படவே மேற்குறித்த மந்திரங்கள் கொள்ளத் தக்கன. ஆன்மாவின் பேராற்றலினுல் உலகங்கள் யாவும் இறவாநிலை நுகர்ந்து செல்கின்றது. எரி, புனல், மண் முதலியவற்றின் சிறந்த பண்புக்களும் அவ் வான்மாவின் ஆற்றலானே பெறப்படுவன. அவ்வாறே, உடலங்கள் தோறும் நிலவுகின்ற புலன் பொறிகளின் சிறந்த பண்புக்களும் அவ் வான்மாவினுல் அடையப்படுவன. புலன்களும் உறுப்புகளும் உரிய பண்

புக்களைத் தாமே பெற்றவைக ளென்று, ஆற்றலும் ஒளியும் மிக்க ஆன்மாவால் எய்தப் பெறுவனவாம்.

தேவா வை ம்ருத்யோ ரபிபயுஸ்தே ப்ராஜாபதி முபா தாவன்.

தைத்திரிய சம்ஹிதை. II, iii, ii, i.

(இன்னும் வரும்)

மரத் தந்தம்

இயற்கையின் அற்புதப் பொருள்களில் மரத்தந்தமும் ஒன்று. மத்திய அமெரிக்காவிலும் தென் அமெரிக்காவிலும் வளரும் ஒரு வகை மரத்தின் விதைகளிலிருந்து இது உண்டாகிறது. இம்மரம் தென்னை வர்க்கத்தைச் சேர்ந்தது. இதில் மனிதனுடைய தலை யளவுள்ள பெரிய காய்கள் உண்டாகின்றன. ஒரு காய் முப்பது ராத்தல் வரை எடையுள்ள தாயிருக்கும். ஒவ்வொரு காயிலும் சுமார் 50 கொட்டைகள் இருக்கின்றன. இவை கெட்டியாயும், நல்ல வெண்ணிறமாயும் இருக்கின்றன. இக்கொட்டைகளிலிருந்து தயாரிக்கப்படும் தந்தத்துக்கு மெருகு கொடுத்துவிட்டால் யானைத் தந்தத்தை முற்றிலும் ஒத்ததாயிருக்குமாம். தற்போது இது பெரும்பாலும் பொத்தான்கள் செய்வதற்கு உபயோகிக்கப்படு கிறது.

அதிசய நுண் ணுணர்வு.

அமெரிக்காவின் தலைநகராகிய வாஷிங்டனில் நிறைக் கல் களையும், அளவு கோல்களையும் பரிசோதிக்கும் அரசாங்கக் காரியாலயம் ஒன்றிருக்கிறது. இக்காரியாலயத்தில் வேலை பார்க்கும் மிஸ்டர் ஜான் கிளாசி என்னும் நிபுணர் அதிசயமான நுண்ணுணர்வு படைத்தவராம். இவருக்கு வயது 70 ஆகி றது. ஆயினும் தூரதரிசினி முதலிய கண்ணடிக் கருவிகள் செய்வதில் ஓர் அங்குலத்தில் பத்து லட்சத்தில் ஒரு மடங்கு வேற் றுமை இருந்தாலும் கையாலுணர்ந்து கண்டுபிடித்துச் சொல்லி விடுவாராம். இவர் வாலிப பருவத்தினராயிருந்தபோது தூர தரி சினி ஒன்று வாங்க ஆவல் கொண்டிருந்தார். ஆனல் போதிய பணம் கிடைக்கவில்லை. எனவே, தாமே கண்ணடி தேய்த்துத் தூர தரிசினி செய்யக் கற்றுக்கொண்டார். இதிலிருந்து இவருக்கு இவ் வதிசய நுண்ணுணர்வு வளர்ந்துவந்தது. இப்போது உலகில் மிக வும் விலையுயர்ந்த அணுதரிசினிக் கண்ணடிகளால் கண்டுபிடிக்க முடியாத அளவு வேற்றுமைகளை ! இவர் கையால் உணர்ந்து கண்டு பிடித்து விடுகிறாராம்.

ஒவ்வொரு
குடும்பத்திற்கும்
இன்றியமையாத
பொக்கிஷம்.

REGISTERED TRADE MARK
MINSARA RASAM

மின்சார ரசம்
கையிலிருந்து
விட்டால் வேறு
மருந்தே
தேவை இராது.

மின்சார ரசம்

ஒன்றே எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம்போன்றதென உலகப் பிரசித்தி பெற்றுள்ளது. மின்சார ரசம் செய்வதில் உபயோகப் படுத்தப் பட்டுள்ள சரக்குகளுக்கு இயற்கையாகவே ஒருவித மின்சார சக்தியுண்டு. இதில் பாஷாண சம்பந்தமான சரக்குகள் கிடையாது. பத்தியமில்லை. அனுபானமில்லை. உள்ளுக்கும் மேலுக்கும் துளிக்கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம்.

சகலவித ஜுரங்கள், தலைவலி, ஜலதோஷம், இருமல், அஜீரணம், புளியேப்பம், வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு, பல்வலி, பல்லரணை, வாய் நாற்றம், கைகால்பிடிப்பு, வாய்வு தொந்தரவுகள், வாத ரோகங்கள், காலரா, பிளேக், ஜன்னி, ஸ்திரீ ரோகங்கள் குழந்தை வியாதிகள் இவைகளுக்கு மின்சார ரசம் கைகண்ட மருந்தென்பது தினந்தோறும் ஆயிரக் கணக்காய் தேசமெங்கும் உபயோகித்து வருபவர்களின் அனுபவமாகும். உண்மை விளங்க ஒரே முறை பரீக்ஷியுங்கள்.

இன்றைக்கே எழுதுங்கள்! கேட்லாக் இனாம் !!
புட்டி ஒன்றுக்கு விலை ரூ. 2. தபால் சார்ஜ் வேறு.

எச்சரிக்கை: அசல் மின்சார ரசம் ஒன்றுக்கே மேற்கண்ட டிரேட்மார்க் உள்ளது.

விலாசம் :—

மின்சார ரசம் கம்பெனி லிமிடெட்,
சேலம் (S. I.)

F. M. S. க்கும் S. S. க்கும் சோல் ஏஜண்டுகள்,
மெஸர்ஸ் :

ஆர். இ. முகம்மது காசீம் & கோ,
கிளாங், பினாங், சிங்கப்பூர்.

A



PERFUME SPRAY.

பன்னீர்

தெளிக்கும் கருவி.

சாதாரணமான எந்த
வித பாட்டில்களிலும்
வைத்து உபயோகிக்கலாம்.

விலை 1-க்கு

ரூ. 2-4.

"Collapsible" Key Ring.

A Key Ring that does not buldge the pocket.

Price As. 3 each, Dozen Rs. 2.



திருநெல்வேலி நூல் துண்டுகள்.

புது மாதிரி நெசவு. நீடித்து உழைக்கும்.
3 மு. துண்டு 1-க்கு அணா 12.
4 மு. ,, 1-க்கு அணா 14.

K. S. MUTHIAH & CO., Tinnevelly.

‘ஸ்பிரிட் ஸ்டவ்’ என்னும் சுளுவான சமையல் இயந்திர அடுப்பு.



இதனால் வழிப் பிரயாணம் செய்வதற்கும் காப்பி, தே தண்ணீர், கோகோ, தயார் செய்வதற்கும், ஸ்நேகிதர்களுடன் சேர்ந்து பிக்னிக் கார்டன் பார்டி செய்வதற்கும் வெகு அநுகூலமானது. இது பித்தளையினால் தயார் செய்யப்பட்டது. வெகு நாள் உழைக்கும். வழிப் பிரயாணத்திற்கு ஒரு சிறு அட்டை பெட்டியில் வைத்து எடுத்துச் செல்லலாம்.

விலை ரூ. 2-8-0. சிம்பிளக்ஸ் நாவல்டி அவுஸ்,

போஸ்ட் பாக்ஸ் 142, ஜி. டி. மதராஸ்.

ஹஸ்த லக்ஷண சாஸ்திரம்.

விளக்கமான அனேக படங்கள் அடங்கிய இச்செந்தமிழ் வசன நூலறிவினால், ஞான திருஷ்டி, விவாகலாபம், ஆயுள், குணம், அதிர்ஷ்டம், அறிவு, சந்தானம், வலி, அபாயம், தயை, வியாதி, கண்டம், வஞ்சகம், பக்தி, ஐசுவரியம், சக்தி, சிற்றின்பம், புத்தி, பேரின்பம், வியாச்சியம், காரிய சித்தி, சௌக்கியம், முதலியன அறியலாம். விலை ரூபா 2—0—0.

V. S. குமாரசுவாமி முதலியார் & ஸன்,

(7) வேலூர் (North Arcot.)

ஜோதிஷ சாஸ்திர பிரகடனம்.
கர்ண யக்ஷணி அல்ல

1. ஜாதகத்தினுடைய நகலாவது, அல்லது பிறந்த வருஷம், மாதம், தேதி, கிழமை, பகல் நாழிகை அல்லது ராத்திரி நாழிகை, ஆண், பெண், பிறந்த ஊர் இவைகளை எங்களுக்கு எழுதி அனுப்பினால் (1) ஜாதகரிட ரூபம், (2) ஸ்வபாவம், (3) சரீர தாருட்யம், (4) தன ஸம்பாதனை, (5) ஸஹோதரம், (6) மாதுர், (7) வித்யை, (8) பூ ஸம்பாதனை, (9) ஸந்தானம், (10) சத்துரு, (11) ரோகம், (12) ருணம், (13) களத்திரம், (14) களத்திர ஆயுர்த்தாயம், (15) களத்திர அன்யோன்யம், (16) களத்திர ரூபம், ஸ்வபாவம், சரீர தாருட்யம், (17) ஜாதகரிட ஆயுர்த்தாயம், (18) பாக்யம், (19) பிதுரு ஸௌக்யம், (20) தொழில், (21) ஜீவனம், (22) லாபம், (23) விரயம். இப்படியாக (23) பாவ பலன்கள் எழுதி வி. பி. செலவு உள்பட ரூ 1-4-0 க்கு வி. பி. யில் அனுப்பப்படும். ஒரு மகா தசைக்கு 9. புக்திகளின் பலன்கள் எழுத ரூபாய் 2—0—0.

ஸ்ரீ கிருஷ்ண விலாச ஜோதிஷசாலை,

மோகனூர், கரூர். S.I.Ry.

லோகோபகாரி.

தமிழ் நாட்டில் பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகை. முப்பத்திரண்டாவதாண்டு இப்பொழுது நடக்கிறது. பாலி சு. நெல்லையப்பபிள்ளை இதன் ஆசிரியர். தாங்கள் இதுவரை சந்தாதாராகாவிட்டால் உடனே எழுதுங்கள்.

வருட சந்தா ரூபா 4.

மாதிரிப் பிரதி இனும்.

'லோகோபகாரி'

பத்திரிகாலயம்,

கோமளேசன் பேட்டை,

சென்னை.

பச்சை மோதிரத்தின் மர்மம்.

ஓர் இனிய துப்பறியும் தமிழ் நாவல். இதுவரை இம்மாதிரி திடுக்கிட்டு ஆச்சரியப்படும் படியான துப்பறியும் கதை வெளி வந்ததில்லை. புஸ்தகத்தைக் கையில் எடுத்தால் படிக்காமல் கீழ் வைக்க முடியாது. 225 பக்கங்கள் நேர்த்தியான அச்சு. விலை ரூ. 1.

"லக்ஷ்மி" சந்தா நேயர்கட்கு விலை அணா 12.

"லக்ஷ்மி" ஆபீஸ்,
தபால் பெட்டி 99,
சென்னை

உத்திரவாதமுள்ள கடியாரம்

இது கையில் கட்டும் கடியாரம் தங்கமுலாம் பூசியது. உறுதியான வேலை. பல வருஷங்கள் உழைக்கும். இன்றே ஒரு கடியாரத்திற்கு ஆர்டர் செய்யுங்கள். விலை ரூபா 8—8.

SANDERSON & Co.,
Post Box No. 156, MADRAS.

சுந்தரி கோல்ட்மெடல் ஆர்மோனியம் பெட்டிகள்.

இப்பெட்டிகளானவை உயர்ந்த தேக்கு மரத்தால் செய்யப் பட்டது. பல்லோர்களாலும் நன்கு மதிக்கப் பட்டு, தினசரி நூற்றுக் கணக்காக ஏற்றுமதி செய்யப் பட்டு வருகின்றன. விலை விபரம். ரூ.

நெ. 1.	ஆர்மோ 37 சுரம்	1-வரிசை 4-ஸ்டாப்பு ப்ரென்சுரீட்ஸ்	35
நெ. 2.	,,	ஜெர்மன்ரீட்	27
நெ. 3.	,,	1-வரிசை அமெரிக்கன்ரீட்	25
நெ. 4.	,,	2-வரிசை அமெரிக்கன்ரீட் 5 ஸ்டாப்பு ஒஸ்தி	40
நெ. 5.	,,	,, ஜெர்மன்ரீட் உள்ளது ...	45

கவனிப்பு :—ஆர்டர் செய்பவர்கள் கால் பங்கு தொகை முன் பணம் அனுப்பவேண்டும். எங்கள் கேட்லாக்கு இனாம்.

விலாசம் :—எஸ். பாபு ஆர்மோனியம் தொழிற் சாலை,
தபாற் பெட்டி 289, மதராஸ்.

மணவாழ்க்கையின் மர்மங்கள்.

இந்நூல் உங்களுக்கு இல்லாமல் முடியாது!

இஃது தகுந்த ஆயுர்வேத, ஆங்கில, மேற்கொள்கைகளைக் கொண்டு, மேலோரின் குடும்ப வாழ்க்கையில் சாஸ்திரோக்தம் போல் எழுதப்பட் டிருக்கும் குடும்ப ரகஸ்ய இன்ப நூலாகும். ஏராளமான பிரதிகள் விலையாய்விட்டன. இன்றே எழுதுங்கள். முன் வெளியிடப் பட்ட "கொக்கோகக் கோலம்" என்னும் நூலின் விரிவு நூலே இஃது என்பது நண்பர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகிறோம். விலை ரூபா 2—4—0 தபால் செலவு 0—6—0.

துளசிராம் புக் டிபோ,
33, தையப்ப முதலி தெரு, ஜி. டி. மதராஸ் (ல.)

எங்களின் 8 காரெட் தங்கடயல் கைகடியாரம் 5-வருஷம் உத்திரவாதம் உள்ளது ஒன்று வாங்குகிறவர்களுக்கு ஒரு பான்சி பாகெட் கடியாரம்

இனாமாக கொடுக்கப்படும்.



இக் கெடியாரம் 18-காரெட் தங்க டையலுடன் செய்யப்பட்டு 5-வருஷம் உத்திரவாதம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. கைக் கடியாரமும் பாகெட் கடியாரம் இரண்டுக்கும் ஐந்து வருஷம் உத்திரவாதம்.

கைக் கடியாரம் பாகெட் கடியாரம் ரூ. 9—0—0
தனியாக பாகெட் கடியாரம் ரூ. 4—0—0

விலாசம்:—வின்னர் வாச் கம்பெனி,
போஸ்டு பாக்ஸ் நெ. 371-மவுண்ரோட்டு மதராஸ்.

நமது புதிய பிரசுரங்கள்.

உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் திருத்தமுற அச்சிட்டவை.

1.	காசி அல்லது புண்ணியபூமி ...	0	12	0
2.	மனோஹரி ...	0	8	0
3.	பரிமளா ...	1	0	0
4.	மணிவடக்களவு (ஒரு துப்பறியும் கதை) ...	0	4	0
5.	கந்தரலங்காரம், கந்தர் சஷ்டி கவசம், அகத்திய பஞ்சகம் முதலிய ஒரே புஸ்தகம் ...	0	4	0
6.	தாலாட்டுக் கோவை ...	0	3	0
7.	பழமொழித் திரட்டு ...	0	3	0
8.	நடராஜப்பத்து ...	0	2	0
9.	பங்கஜம் ...	0	2	0
10.	குயில் மொழி ...	0	2	0
11.	கனவுப் பொடி ...	0	2	0
12.	எனது காங்கிரஸ் யாத்திரை ...	0	3	0
13.	வர்த்தக யுக்தி ...	0	12	0

மானேஜர் :—**லக்ஷ்மி ஆபீஸ்,**
தபால் பெட்டி **99**, சென்னை.

24 தங்க மெடல்கள் பரிசுபெற்ற

மதராஸ் N. V. ஷண்முகம் கம்பெனியார்

பட்டணம் பொடி.

காரம், மணம், குணம், நிறம், வாடை கமழுகிறது.
இன்றே விலை விபரத்துக் கெழுதுங்கள்.

N. V. ஷண்முகம் & கோ.,
போஸ்ட் பாக்ஸ் 555, மதராஸ்.

உலக மெங்கும் புகழ் பெற்ற

A. கன்னைய்ய நாயுடு அண்ட் கம்பெனியார்

பட்டணம் பொடி.

காரம், மணம், குணம், நிரம், வாடை ததும்பியது.
இன்றே ஆர்டர் செய்யுங்கள்.

A. கன்னைய்ய நாயுடு அண்ட் கோ.
நெ. 11, துளசிங்கன் தெருவு,
வண்ணாரப்பேட்டை, P. O. மதறாஸ்.

கேஸரியின்

லோத்ரா.

கர்ப்பாசய ரோக நிவாரிணி

இதனுபயோகத்தால் குணம் கைக்கொண்ட பெண்மணிகள், இதை ஸ்திரீகளுக்கோர் வரப்பிரசாதினி யென்றும் அதிசிரேஷ்டமான அவுஷத மென்றும், விலையில்லா ஆபரண மென்றும் சொல்லுகிறார்கள். ருதுசூலை, அகாலபஹிஷ்டி, ருது சிராவம் ஜாஸ்தி அல்லது குறைச்சலாய்ப் போவது, பஹிஷ்டை தடைபட்டுப் போவது, வெண் ரத்தப் போக்கு, கர்ப்பஸ்ராவம், அகாலப் பிரசவம், கருப்பை நழுகி விடுதல், கர்ப விரணம், ருது சூலையினால் வயிற்றில் உண்டாகும் கட்டி, மூர்ச்சை, சரீரம் பருத்தோ அல்லது மெலிந்தோ போவது, கணச்சூடு, சந்தான மில்லாமை, மலபத்தகம், இருமல், உப்பஸம், மேஹ ஜ்வரம் முதலிய சமஸ்த ரோகங்களும் இந்த லோத்ராவி னுபயோகத்தால் வெகு நம்பகமாய் நிவர்த்திக்கப்படும். இதன் விலை பெரிய புட்டி (12 அவுன்ஸ்) ரூ. 3-0-0

சிறிய புட்டி (6 அவுன்ஸ்) ரூ. 1-10-0

கேஸரி குடீரம், ஆயுர்வேத ஔஷதசாலை,

எழும்பூர், மதராஸ்.

A.

S.

எ. எஸ். சுகந்த மூக்குத் தூள்.

ஒரு சிட்டிகை யெடுத்து காலணு மூக்குத்தூளுடன் கலந்தால் அதிகயின்பமான சுகந்த வாசனையைத் தரும். கண்டத்துக்கு மேற்பட்ட 96 வியாதிகளைக் கண்டிக்கும். இந்தத் தூள் எக்காலமும் கெடாது. எந்தக் கம்பெனிகளிலாவது வாங்குபவர்கள் எ. எஸ். மார்க்கை கவனித்து வாங்கவும்.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணு 4 டிடஜன் 1-க்கு ரூ. 2-4 டி சேர் 1-க்கு ரூ. 3.

எம். ஜெ. பரிமள மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணு 3 டிடஜன் 1-க்கு ரூ. 2 டி சேர் 1-க்கு ரூ. 1-8.

பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

எ. எஸ். முகம்மத் சம்சுத்தீன் சாயபு,

106, சவுக்கார் பேட்டை, தபால் பெட்டி நெ. 1201, மதறாஸ்.

31856
சென்னை-600 008

கம்பளிப் போர்வைகள்.

அசல் கம்பளி, மிருதுவானது. நீடித்து உழைக்கக் கூடியது. குளிருக்கு அடக்கமானது. சிவப்பு, பச்சை, மஞ்சள், ஊதா முதலிய பல கலர்களில் கிடைக்கும். 6 முழம் நீளம் 3 முழம் அகலமுள்ளது.

1 ரெ.	விலை ரூ.	11	முதல்	15	வரை
2 ,,	,,	10	,,	11	,,
3 ,,	,,	8½	,,	10	,,

கம்பளிச் சட்டை

முறுக்கு கம்பளி நூலால் செய்யப்பட்டது. மிகவும் அழகாயிருக்கும் குளிருக்கு அடக்கமானது. இதை அணிந்துகொண்டால் நடுக்கம், சீதளம் அண்டாது. தோட்டங்களி விருப்பவர்களுக்கு முக்கிய அவசியமானது.

கிரே கலர் சட்டை 1-க்கு ரூ. 4-8-0

உயர்ந்த வெள்ளை ,, ரூ. 12 முதல் 18 வரை.

TRAVELLING RUGS.

நயமான கம்பளி, நல்ல குளிரில்போர்த்துக்கொள்ள உதவும். கலர் கிரே, கறுப்பு, சிவப்பு.

5 மு. நீளம் 3 மு. அகலம் ரூ. 5.

கம்பளி ஆசனம்.

ஜெபம் செய்யும்போது ஆசாரமாய்ப் போட்டு உட்காரக் கூடியது.

விலை அணு 12, ரூ. 1, 1½.

உயர்ந்தது ரூ. 3½ முதல் 5 வரை.

LADY'S SHAWL.

பெண் பிள்ளைகளுக்காக ஸ்பெஷலாய் தயாரித்தது. 5 முழம் நீளம் 2½ முழம் அகலமுள்ளது. அழகான கலர்களிலும் கிடைக்கும்.

போர்வை 1-க்கு விலை ரூபா 3.

மடிதாவனி

இது அசல் கம்பளியால் செய்யப்பட்டது. வைதீக பிராமணர்கள் ஸ்நானம் செய்ததும் மடியாகத் தரித்துக்கொள்ள உபயோகமுள்ளது.

5 முழம்	24	இஞ்சு	அக.	ரூ.	2
6 ,,	24	,,		,,	2½
7 ,,	29	,,		,,	3
8 ,,	40	,,		,,	5½
10 முழம்	40	இஞ்சு	அக.	ரூ.	7
16 ,,	40	,,		,,	12
18 ,,	40	,,		,,	14

கே. எஸ். முத்தையா & கோ.

சில்க் ஹவுஸ் - - காசி.